RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 09 யூன் 2023 இதழ்:- 07

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax: 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

# என் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி:- நடந்தது இது தான் என்கின்றார் கஜேந்திரகுமார்



மருதங்கேணியில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் நடத்திய சந்திப்பிற்கு துப்பாக்கியுடன் வந்த நபர்கள் குறித்தும் அங்கு இடம் பெற்ற சம்பவங்கள் குறித்தும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முழுமையான தகவல்களை வெளியிட்டுள்ளார் அவர் தெரிவித்துள்ளதாவது பகல் மூன்று மணியளவில் நானும் எங்கள் கட்சியின் உறுப்பினர்களும் மருதங் கேணி விளையாட்டு மைதானத்திற்கு சென்றிருந்தோம், விளை யாட்டுக்கழக உறுப்பினர்களுடன் சந்திப்பை மேற்கொள்வதற்காக அவர்களின் வேண்டுகோளிற்கு (7ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance 100% Refund
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

# காலையில் கொழும்பில் கைதான கஜேந்திரகுமார் மாலையில் கிளிநொச்சியில் பிணையில் விடுவிப்பு!

கொழும்பில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எம்.பி. பிணையில் விடுவிக்கப்பட்டார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரின் இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அங்கிருந்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு மாலை 5.30 மணியளவில் அழைத்து வரப்பட்ட அவரிடம் பொலிஸார் (3ம் பக்கம் பார்க்க)



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின் 423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Kingston Rd & Bellamy

**Scarborough** $499,999
Bedrooms: 2 Washrooms: 1
Renovated Kitchen & Bath condo

### Birchmount Rd & Finch Ave

**Scarborough** $499,999
Bedrooms: 3 Washrooms: 2
Well Maintained Building & Clean


### Markham & Eglinton

**Scarborough** $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St

**Mississauga** $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Ryerson/Victoria

**Niagara Falls** $687,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Fantastic Investment Potential

### King St & Queen St

**Hamilton** $699,900
Bedrooms: 2 Washrooms: 2
Located Downtown Hamilton

### Liverpool & Bayly

**Pickering** $749,999
Bedrooms: 2 Washrooms: 2
Beautifully Maintained, Upgrades

### Potter Dr & Millcreek Dr

**Loyalist** $780,000
Bedrooms: 4 Washrooms: 3
Brand New End Detached Home

### Yonge St / Queens Quay

**Toronto** $929,000
Bedrooms: 2 Washrooms: 2
Over 973 Sqft Suite And Waterfront

### Bayview & Major Mac

**Richmond Hill** $1,299,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### Lakeshore Rd. & Victoria St.

**Port Hope** $1,325,000
Bedrooms: 4 Washrooms: 4
Corner Lot With Double Car Garage

### Morningside & Finch

**Scarborough** $1,399,900
Bedrooms: 4+1 Washrooms: 3
Fully Renovated Detached Home

### Meadowvale / 401

**Scarborough** $1,688,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Tenth Line & 19th Line

**Stouffville** $1,750,000
Bedrooms: 5+1 Washrooms: 4
Brand New Field gate Home

### Dixie Rd & Kingston Rd
FOR LEASE

**Pickering** $1,850
Bedrooms: 1 Washrooms: 1
Beautiful Recently Renovated

### Commercial/Retail


**Grey Highlands** $7,200,000
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு யூன் 15 முதல் யூலை 15 வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்களின் கவனத்திற்கு!




அன்பு இல்லக் குழந்தைகளுக்கு யூன் 15 முதல் யூலை மாதம் 15 வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்கள் தயவு செய்து 14 யூன் 2023ம் திகதிக்கு முன்னதாக தங்கள் விபரங்களைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. இரு வார கால விடுமுறை தேவைப்படுகின்றது. அனைத்துச் செயற்திட்டங்களும் வழமை போன்று நடைபெறும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# காலையில் கொழும்பில் கைதான கஜேந்திரகுமார் மாலையில் கிளிநொச்சியில் பிணையில் விடுவிப்பு!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர். இதன் பின்னர், அவர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன் போதே அவரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதி அளித்தார். இதே நேரம், கஜேந்திரகுமார் எம்.பியின் கைதைக் கண்டித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக அவரின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். முன்னதாக, யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குக்கு கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் சந்திப்பில் ஈடுபட்டிருந்த கஜேந்திரகுமாருக்கும் சிவில் உடை பொலிஸாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில், சிவில் உடை பொலிஸார் தன்னை தாக்கி துப்பாக்கியால் குறி வைத்து அச்சுறுத்தினர் என்று கஜேந்திரகுமார் குற்றஞ் சாட்டியிருந்தார். இந்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் அளிக்கவருமாறு பொலிஸார் கஜேந்திரகுமாருக்கு அழைப்பு விடுத்தனர். அங்கு அவர் செல்லவில்லை. இந் நிலையில், பாராளுமன்ற அமர்வுக்காக அவர் கொழும்பு சென்றிருந்த வேளை கஜேந்திரகுமாரை பொலிஸார் கைது செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சர்வதேச விசாரணை பொறிமுறை மூலம் தான் தமிழர்களுக்கான தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை எனது கைது எடுத்துக்காட்டுகின்றது இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம்எம். பி. தெரிவித்தார். மருதங்கேணி பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச் சாட்டில் கைதுசெய்யப் பட்ட கஜேந்திரகுமார் எம்.பி. கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களை (17ம் பக்கம் பார்க்க)

# எம் இனிய வாசகர்களின் கவனத்திற்கு!

எமது இனிய வாசகர்களே! உங்கள் அபிமான ஈழநாடு எதிர்வரும் யூலை 07, 14 திகதிகளில் வெளிவராது. 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை வழமை போன்று வெளிவரும். அதேவேளை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் உணவளிக்கும் செயற்பாடுகள் வழமை போன்று தவறாது நடைபெறும். (01 யூலை முதல் 21 யூலை வரையான உணவளித்தோர் விபரங்களும் ஒளிப்படங்களும் 21 யூலை 2023 வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். தொடர்புகளுக்கு 416 841 9600

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தமிழரசுக்கட்சிக்குள் தடாலடி மாற்றங்கள்!

## தனது பிரத்தியேக இணைப்பாளரையும் மாற்றினார் சம்பந்தர்!




இலங்கை தமிழரசு கட்சிக்குள் தடாலடியாக சில மாற்றங்களை அந்தக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் மேற்கொண்டுள்ளார். அவசரமாக அரசியல் குழு கூட்டத்தை கூட்டியுள்ள அவர், திருகோணமலை மாவட்டத்துக்கென நியமித்த தனது பிரத்தியேக இணைப்பாளரையும் மாற்றியுள்ளார். இதனிடையே, தமிழரசு கட்சிக்குள் தலைமைப் பதவி தொடர்பில் நீடிக்கும் கோஷ்டி பூசல்களை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசாவையே தலைமைப் பதவியில் தொடர்வதற்கும் வழி வகை செய்யப்படலாம் என்று கூறப்படுகின்றது

தமிழரசு கட்சியின் பெருந்தலைவரான இரா.சம்பந்தன் கடந்த சில வருடங்களாக வயது மூப்பு இயலாமை காரணமாக வீட்டுக்குள் முடங்கியுள்ளார். இதனால், கட்சியின் கூட்டங்களில் அவர் பங்கேற்பதில்லை.

இந்த நிலையில், தமிழரசு கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டன. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும் அந்தக் கட்சி வெளியேறியிருந்தது. கட்சியின் தலைமைப் பதவி தொடர்பிலும் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், தமிழரசு கட்சியின் அரசியல் குழுவினரை தமது இல்லத்துக்கு சந்திப்புக்கு வருமாறு கட்சியின் தலைவர் ஊடாக இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்துள்ளார். தமிழரசின் அரசியல் குழு கூடி பல முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளது. இதன்போது, கட்சியின் தலைமைப்பதவிக்காக நிலவும் கோஷ்டி பூசல்களை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் மாவை சேனாதிராசாவை தொடர்ந்தும் தலைமைப் பதவியில் நீடிக்க ஆதரவு கோருவார் என்று கூறப்படுகின்றது. இது தவிரவும் வேறுபல முக்கிய முடிவுகளும் எடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

இதுதவிர, திருகோணமலை மாவட்டத்துக்காக தன்னால் நியமிக்கப்பட்ட பிரத்தியேக இணைப்பாளர் கனடா குகதாசனையும் அவர் மாற்றியுள்ளார்.

அவரின் இடத்துக்கு திருகோணமலை நகர சபையின் முன்னாள் நகரபிதா என். இராசநாயகத்தை நியமித்துள்ளார். இந்த நியமனம் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட அரச அதிபருக்கும் சம்பந்தன் ஒப்பமிட்டு உத்தியோகபூர்வ கடிதத்தையும் அனுப்பி வைத்திருந்தார்.

முன்னதாக, இணைப்பாளராக செயல்பட்டிருந்த குகதாசன் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக சம்பந்தன் பரிந்துரைத்தவர்களை நிராகரித்தார். எம். ஏ. சுமந்திரனின் வழி நடத்தலின்படி, குகதாசன் செயல்பட்டார் என்று பின்னர் சம்பந்தனுக்கு தகவல் கிடைத்தது.

இதன் பின்னர், குகதாசனுடனான தொடர்பை சம்பந்தன் துண்டித்ததுடன், இந்த விடயம் தொடர்பாக ஆராய குழு ஒன்றையும் அமைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (22ம் பக்கம் பார்க்க)

## மிசிசாகா இந்து மகாசபையின் புதிய நிர்வாகத் தெரிவு

**மிசிசாகா இந்து மகாசபை கடந்த 04 யூன் 2023 அன்று நிகழ்ந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போது மேற்படி அறங்காவலர்கள் பொதுச்சபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.**

**தலைவர் சிவா சிவநாதன்**


**உப தலைவர் சிவா சின்னத்தம்பி**

**செயலாளர் வேல்நாதன் சபாரத்தினம்**

**உப செயலாளர் இராமகிருஷ்ணர் கந்தசாமி**

**பொருளாளர் சிறிஸ்கந்தன் பரமநாதன்**

**இயக்குநர்களாக மோகன் இராஜரட்ணம், சுதாதரன் முருகமூர்த்தி, சிவதான் சுப்பிரமணியம், வரதராஜன் சிவகுரு ஆகியோர் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது**

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

15 யூன் 2023 வியாழக்கிழமை – பிரதோஷ விரதம்

17 யூன் 2023 சனிக்கிழமை – அமாவாசை விரதம்

25 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை – ஆனி உத்தரம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இந்து அமைப்புக்களிடம் செல்லுதல் வெற்றியளிக்குமா?

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பௌத்த மேலாதிக்கம் தொடர்ந்தால், இந்தியாவிலுள்ள இந்து அமைப்புக்களின் உதவியை கோரவுள்ளதாக தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பில் பலரும் அவ்வப்போது பேசியிருக்கின்றனர். ஆனால் எவரும் இதுவரையில் அதற்கான காத்திரமான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. ஆனால் இதில் ஒரு சிக்கலுமுண்டு.

இந்தியாவிலுள்ள இந்து மத அமைப்புக்கள் ஈழத் தமிழர்களை எவ்வாறு நோக்குகின்றன? ஒரு மத அடிப்படையான சமூகமாக நோக்குகின்றனவா அல்லது, இன அடிப்படையில் தமிழ் நாட்டோடு இணைத்து நோக்குகின்றனவா ஏனெனில் ஈழத் தமிழர் அரசியல் தரப்புக்கள் இதுவரையில் தமிழ் நாட்டை தாண்டி, இந்தியாவில் செல்வாக்குமிக்க அரசியல் ஊடாட்டங்களை மேற்கொள்ளவில்லை.

அத்துடன், ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையை ஒரு பெரும்பான்மை இந்து தமிழர்களின் பிரச்னையாக இந்தியாவில் முன்னிறுத்தியதும் இல்லை.

இதற்கான துணிவுள்ள அரசியல் தலைமைகளை இதுவரையில் ஈழத் தமிழ் சமூகம் சந்திக்கவுமில்லை. இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரு கிறிஸ்தவர். ஆனால் அவர் ஓர் அடிப்படைவாதியல்ல.

அவரது காலத்தில் தமிழ் நாட்டை அணுகுவதன் மூலம் புதுடில்லியின் ஆதரவை பெறும் முயற்சிகளை அவர் மேற்கொண்டிருந்தார். ஆனால் அன்றைய சூழலில் அது பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. நாங்களே பல்வேறு பிரச்னைகளை எதிர் கொண்டிருக்கும் போது, உங்களுக்கு எங்களால் எவ்வாறு உதவ முடியுமென்றே அன்றைய தமிழ் நாட்டு தலைவர்கள் பதிலளித்தனர்.

ஆனால் பிற்காலங்களில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழ் நாட்டுத் தலைவர்களோடு நல்லுறவை பேணிக் கொண்டு, சம



வேளையில், புதுடில்லியுடன் நெருக்கமான உறவிலிருந்தார். குறிப்பாக இந்திராகாந்தியுடன் அமிர்தலிங்கம் மதிப்புமிக்க நட்பை கொண்டிருந்தார். அமிர்தலிங்கத்திற்கு பின்னர் அவ்வாறான தொரு தகுதி நிலையுள்ள தமிழ் தலைவரை இதுவரையில் ஈழத் தமிழ் சமூகம் சந்திக்கவில்லை. மேலும் அமிர்தலிங்கம் இந்தியாவின் உதவியின்றி, ஈழத்தமிழர் அரசியல் ரீதியில் முன்னோக்கிப் பயணிக்க முடியாதென்பதிலும் தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

மோடி தலைமையில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்த பின் புலத்தில் தான், இந்து அமைப்புக்களை அணுக வேண்டுமென்னும் சிந்தனை துளிர் விட்டது.

அது தற்போது முன்னர் எப்போதுமில்லாதளவுக்கு ஒரு குறிப்பிட்ட தரப்பினர் மத்தியில், ஒரு சிந்தனைப் போக்காகவும் மாறியிருப்பது போல் தெரிகின்றது.ஆனால் இதற்கு தலைமையேற்கக் கூடிய வலுவான அளுமைகள் எவரும் தமிழ் சமூகத்தில் இல்லை.

விக்னேஸ்வரனுக்கு அவ்வாறான தகுதி நிலைகள் இருக்கின்றன. அவரது தோற்றம், இந்துமதத்தின் மீதான ஈடுபாடு, அவரது நீதிபதி அடையாளம் இவ்வாறான விடயங்களை ஒரு மூலதனமாகக் கொண்டு அவரால் இந்து அமைப்புக்களை இலகுவாக நெருங்க முடியும்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த வேளையில், புதுடில்லியில் இடம்பெற்ற சர்வதேச இந்து மகாநாட்டுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். அங்கு விக்கினேஸ்வரனுக்கு உயர்ந்த மதிப்பளிக்கப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பகவத், திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா ஆகியோருக்கு அருகில் விக்னேஸ்வரன் அமர்ந்திருந்தார். ஆனாலும் விக்னேஸ்வரனுக்கு அந்தச் சூழலை கையாளத் தெரிந்திருக்கவில்லை.

அந்தத் தொடர்புகளை முன் கொண்டு செல்வதற்கு அவர் முயற்சிக்கவும் இல்லை அவருக்கு அதனை முன்கொண்டு செல்லத் தெரியவுமில்லை. ஆகக் குறைந்தது இப்போது அவர் பேசுவதையாவது, நிரூபிப்பதற்கான செயலில் இறங்குவாரா? தமிழ் அரசியல் தலைவர்களின் பிரச்னையே, 'பேச்சுப் பல்லக்கு தம்பி பொடிநடை'.

முதலில் பேசுவதற்கு உண்மையாக இருக்க முயற்சிக்க வேண்டும். கடந்த 14 வருடங்களின் பலரும் பல விடயங்களை பேசியிருக்கின்றனர் ஆனால் தாங்கள் பேசுவதற்கு ஆகக் குறைந்தளவு அர்ப்பணிப்பைக் கூட, எவருமே நிரூபிக்கவில்லை.

# தலைவரைத் தேடும் தொண்டர்கள்?

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தருமான பா. அரியநேந்திரன் தங்களின் தலைவர் யாரென்று தெரியவில்லையென்று குறிப்பிட்டிருக்கின்றார். கதிரையில் ஒரு தலைவரை பார்த்த நாங்கள் இப்போது பத்து தலைவர்களை கதிரையில் காண்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இதன் மூலம் தமிழரசு கட்சிக்குள் நிகழும் தலைமைத்துவ போட்டி தொடர்பிலேயே அரியநேந்திரன் கவலைப்படுவது தெளிவாகின்றது. அரியநேந்திரன் கூறுவது உண்மை தான் தமிழரசு கட்சியின் உண்மையான தலைவர் யாரென்று எவருக்கும் தெரியவில்லை தான். இந்தப் பின்புலத்தில் தான் அவ்வப்போது கட்சியின் தலைவர் யார் என்னும் கேள்வி ஊடகங்களில் செய்திகளாகின்றன. கட்சியிலுள்ள பலரும் அவ்வப் போது தான் தலைமையை பொறுப்பேற்க தயாராக இருப்பதாக அறிக்கை வெளியிடுகின்றனர்.

2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் சம்பந்தனை அனைவருமே ஒரு தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான காங்கிரஸ் கட்சியை தவிர, தமிழ்த் தேசியம் பேசும் ஏனைய கட்சிகள் அனைத்துமே சம்பந்தனை தங்களின் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தனர். இந்த அடிப்படையில் தான், சம்பந்தன் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்க முடிந்தது. சம்பந்தன் தற்போது நோய்வாய்ப் பட்டு அரசியலை தீர்மானிக்கும் தகுதி நிலையை பெருமளவுக்கு இழந்திருக்கின்ற நிலையில் தான், தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் தொடர்பான கேள்விகள் எழுந்திருக்கின்றன.

சம்பந்தன் தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறிய பின்னரும்கூட கட்சியை கட்டுப்படுத்தும் ஒருவராகவே இருந்தார். அரசியலில் சம்பந்தனின் தவிர்க்க முடியாமையே இதற்கான காரணமாகும். ஆனால், சம்பந்தனைப் போன்று தான் பொறுப்பிலிருந்து வெளியேறுகின்றேன். பிறிதொருவர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று மாவை சேனாதிராசாவால் கூற முடியாது.

ஏனெனில், அதன் பின்னர் கட்சி மீதான முழுக் கட்டுப்பாட்டையும் அவர் இழந்துவிடுவார். இந்த நிலையில் தான், கட்சியின் அடுத்த தலைவர் யார் என்னும் கேள்வியும் தங்களின் தலைவர் யார் என்று தங்களுக்கு தெரியவில்லையென கட்சியின் உறுப்பினர்கள் கவலைப்படுகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது. ஆளுமையுள்ளவர் எவரோ அவர்கள் கட்சியில் என்ன பொறுப்பில் இருந்தாலும் அவரகளை மற்றவர்களால் தவிர்க்க முடியாமல் போகும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சுமந்திரன் இல்லாத தமிழரசு கட்சியை கற்பனை செய்வது கட்சியிலுள்ள பலருக்கு இயலாத காரியமாக இருக்கலாம். இதனை சுமந்திரனே ஒருமுறை வேறு விதமாகக் கூறியிருந்தார். எவரும் தலைவராக இருக்கலாம் ஆனால், தீர்மானங்கள் எவரால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதே முக்கியமானது. ஆளுமையுள்ளவர்களின் கருத்துகளே இறுதியில் கட்சியின் தீர்மானமாக மாற்றமடையும். தவிர, தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படும் பிறிதொரு சிக்கலான பக்கம் கட்சியில் ஒருவரின் இடமென்பது அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையால் தீர்மானிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாதவர்களுக்கு கட்சியில் குரல் இல்லாமல் போய்விடுகின்றது. மாவை சேனாதிராசா தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் தான் அவரின் குரல் நலிவுற்றது. இது ஆரோக்கியமானதல்ல.ஆனால், இதுதான் தற்போது தமிழ் கட்சிகளின் அரசியலாக இருக்கின்றது. பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்து விட்டால் அதன் பின்னர் ஒருவரின் முக்கியத்துவம் இல்லாமல் போய்விடுகின்றது. தமிழ்த் தேசிய அரசியல் வெறும் தேர்தல் அரசியலாக சுருங்கிவிட்டது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

ஒருவர், பாராளுமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட, அவரின் தலைமைத்துவத்தை எவராலும் தாண்டிச் செல்ல முடியாமல் இருக்க வேண்டும். அவ்வாறான தகுதிநிலையில் இருக்கும் ஒருவர் தான் மக்களின் தலைவராக இருக்க முடியும். இவ்வாறான தலைமைத்துவமான, வாக்குகளால் உருவாவதில்லை. உண்மையில் எவரை பின்தொடர்வதற்கு மக்கள் இருக்கின்றார்களோ அவரே தலைவராவார். இந்த தகுதிநிலையுடன் இப்போது எவருமே இல்லை. எனவே, தமிழ் மக்களுக்கு ஆற்றல்மிக்க தலைமையென்று ஒன்றில்லை என்பது உண்மைதான்.

# படைகளைப் பலப்படுத்தும் ரணில்!

## கூட்டுப்படைத் தளபதிக்கு கூடுதல் அதிகாரங்கள்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முப்படையினரையும் பலப்படுத்த விரும்புவதுடன் கூட்டுப்படைகளின் தளபதிக்கு மேலும் அதிகாரங்களை வழங்க விரும்புகின்றார். வியாழக்கிழமை நாட்டு மக்களிற்கு ஆற்றிய உரையில் அறிவிக்கப்பட்ட இலட்சியமான தேசிய மாற்றம் திட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதி இராணுவத்தை பலப்படுத்தவும் கூட்டுப் படைகளின் தளபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கவும் விரும்புகின்றார். அமைச்சரவை பத்திர வடிவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இராணுவ திட்டத்தினை அமைச்சரவை ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளது. சட்டவரைவை உருவாக்குவதற்கு அமைச்சர்கள் அனுமதியளித்துள்ளனர். புதிய சட்ட மூலம் தொடர்பில் சட்டமா அதிபரின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஜனாதிபதியின் பரிந்துரையையும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது. ஜனாதிபதியின் புதிய திட்டத்தின் கீழ் பிரதி கூட்டுப்படை தளபதி என்ற பதவியும் உருவாக்கப்படும், எனினும் இந்த பதவி எவ்வாறு உருவாக்கப்படும் என்ற விடயம் அமைச்சரவை பத்திரத்தில் இல்லை.

கூட்டுப்படை தளபதி பாதுகாப்பு செயலாளருடன் இணைந்து பணியாற்றி பாதுகாப்பு படையினருக்கு மூலோபாய அறிவுறுத்தல்களை வழங்குவார். பாதுகாப்பு அமைச்சரின் வழி காட்டுதலின் கீழ் பாதுகாப்பு செயலாளருடன் இணைந்து கூட்டுப் படை தளபதி இலங்கையின் பாதுகாப்பு படைகளின் எதிர்கால முன்னேற்றம் உட்பட பாதுகாப்பு மூலோபாயத்தை ஏற்படுத்துவார்.

ஆயுதப்படைகளின் திறன் எதிரிகளின் திறனுடன் ஒப்பிடுகையில் எவ்வாறு உள்ளது என்பது குறித்து முப்படைகளின் பிரதானி மதிப்பீடுகளை மேற்கொள்வார்.

ஆயுதப்படையினர் தொடர்பான அவசரநிலை திட்டங்களை தயாரித்து முப்படைகளின் பிரதானி அவற்றை மதிப்பிடுவார். ஆயுதப் படைகளின் ஒருங்கிணைந்த – கூட்டுப் பயிற்சிக்கான கொள்கைகளை உருவாக்குவதல் முக்கியமான குறைப்பாடுகள் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பலம் பலவீனங்களை மதிப்பிடுதல் போன்றவற்றில் கூட்டுப்படைகளின் தளபதி ஈடுபடுவார்.

# அதிரடியாகக் கைது செய்யப்படும் தமிழ்த்தேசிய முன்னணி உறுப்பினர்கள்!

## வடமராட்சி கிழக்கு முன்னணி மகளிர் அணி தலைவிக்கும் பிணை கிடைத்தது





தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மற்றொரு உறுப்பினரும், முல்லைத் தீவில் வைத்து, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வற்றாப்பளை கோயில் வளாகத்தில் வைத்து, மருதங் கேணி பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

வற்றாப்பளை ஆலயத்தில், நேர்த்திக் கடன் செலுத்த சென்ற வேளையில், ஆலய வளாகத்தில் வைத்து, அவர் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்க ப்பட்டுள்ளார். கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தைப் பொலிஸார் சுட எத்தனித் ததை முதலில் கண்டு தெரியப்படுத்திய வடமராட்சியைச் சேர்ந்த உதயசிவமே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராக அரச அராஜகம் திட்டமிட்டு அரங்கேற்றப்படுவதாகவும் தெரிய வருகின்றது..

இது இவ்வாறிருக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு மகளிர் அணித் தலைவி சற் குணதேவி ஜெகதீஸ்வரனை, விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாது, வடமராட்சி கிழக்கு தளையடி பொது விளையாட்டரங்கில் கடந்த 03 ஆம் திகதி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்ட நிகழ்வு ஒன்றில் தம்மை உறுதிப்படுத் தாத நபர்கள் புகைப்படம் எடுத்தபோது அவர்கள் யார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது ஆய்வு உத்தியோகத்தர் ஆகியோர் வினவினர்.

அவர்கள் தங்களுடைய அடையாளங் களை நிரூபிக்க தவறிய வேளையில் அவரை அடையாளத்தை நிரூபித்து விட்டு செல்லுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் கேட்கப்பட்ட போது அவர் மீது தாக்குதல் நடத்தி தப்பிச் சென்று விட்டார்.

இந்நிலையில், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்றக் குற்ற ச்சாட்டை முன்வைத்து மருதங்கேணி பொலிஸாரால் சற்குணதேவி ஜெகதீஸ் வரன் 05 யூன் 2023 காலை செய்யப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அப்போது நீதிமன்றத்தில் பிரசன்னமாகி யிருந்த கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட 10க்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் குறித்த நபருக்கு பிணை வழங்க வேண்டாம் என்று நீதிமன்றத் திடம் கோரிநின்றனர். அக் கோரிக் கையை ஆராய்ந்த நீதிமன்றம் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது.

### பிந்திய செய்தி

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர் களும் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளனர். யாழ். மருதங்கேணி பகுதி யில் பொலி ஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் 07 யூன் 2023 புதன் கிழமை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு ள்ளதுடன், அடுத்த மாதம் 14ஆம் திகதி தவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் அரசியல் கைதிக்கு அழைப்பாணை



வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் 05 யூன் 2023 அழைப்பாணை வழங்க ப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர் ணன் என்பவரையே புதன்கிழமை 07 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனி யாவில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவுக்கு சமூகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டு ள்ளது. அவருக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் பிரிவு 01 இன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைய வாக்குமூலம் ஒன்றை தருவதற்கு, 2023 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் வவுனியா கிளை க்கு சமூகமளிக்குமாறு அழைக்கின் றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# என் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி:- நடந்தது இது தான் என்கின்றார் கஜேந்திரகுமார்



மருதங்கேணியில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் நடத்திய சந்திப்பிற்கு துப்பாக்கியுடன் வந்த நபர்கள் குறித்தும் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முழுமையான தகவல்களை வெளியிட்டுள்ளார் அவர் தெரிவித்துள்ளதாவது

பகல் மூன்று மணியளவில் நானும் எங்கள் கட்சியின் உறுப்பினர்களும் மருதங்கேணி விளையாட்டு மைதானத்திற்கு சென்றிருந்தோம். விளையாட்டுக்கழக உறுப்பினர்களுடன் சந்திப்பை மேற்கொள்வதற்காக அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க சென்றிருந்தோம்.

அந்த சந்திப்பு ஒரு மரத்திற்கு கீழே இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து நாங்கள் சந்திப்பை மேற்கொண்டிருந்த இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு எங்களிற்கு சந்தேகத்தை கொடுக்கும் விதத்தில் நடந்து கொண்டார்கள்.

என்னுடைய உத்தியோகபூர்வ ரிசேர்ச் உத்தியோகத்தருக்கு அவர்களிடம் ஆயுதங்கள் இருப்பதாக சந்தேகம் எழுந்ததால் அவர்களிற்கு அருகில் சென்று அவர்களின் அடையாளங்களை உறுதி செய்யுமாறு கேட்டிருக்கின்றார்.

அவர்கள் தாங்கள் அந்த பாடசாலையில் பரீட்சைகள் இடம் பெறுவதால் தான் வந்ததாக தெரிவித்துள்ளனர் அவருக்கு சந்தேகம் மேலும் அதிகரித்ததை தொடர்ந்து நீங்கள் எந்த அடிப்படையில் இங்க வந்தனீங்கள் பள்ளிக்கூடம் என்றால் ஏன் வந்தனீங்கள் என பிரச்சினை பட நான் அந்த இடத்திற்கு சென்று நான் யார் என்பதை அடையாளப்படுத்தி அவர்களின் அடையாளத்தை கேட்டேன்.

அவர்கள் தாங்கள் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சிஐடி என தெரிவித்தனர் நீங்கள் உத்தியோகபூர்வமாகத் தான் செயற்படுகின்றீர்கள் என்றால் உங்களின் உத்தியோகபூர்வ அடையாளத்தை உறுதிப்படுத்துங்கள் என நான் அவர்களிடம் கேட்டேன் அவர்கள் அதனை மறுத்தனர் தாங்கள் காட்டவேண்டிய தேவையில்லை நாங்கள் கேட்கவும் முடியாது என தெரிவித்தனர்.

நாங்கள் நடத்திக் கொண்டிருந்த கூட்டத்திற்கு நீங்கள் அனுமதியில்லாமல் வருகின்றீர்கள் என்றால் கட்டாயம் நீங்கள் உங்கள் அனுமதியை உறுதிப்படுத்தவேண்டும். நாங்கள் கேட்டால் நீங்கள் அதனை செய்யவேண்டும் என நான் தெரிவித்தேன்.

நீங்கள் உத்தியோகத்தை செய்ய வந்திருக்கின்றீர்கள் என்றால் நீங்கள் உங்கள் அடையாளத்தை நிச்சயமாக உறுதிப்படுத்த வேண்டும் அதுதான் சட்டம் எனவும் நான் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் அதனை மறுத்து கதைக்கமுற்பட்டார்கள். நான் நீங்கள் செல்வதற்கு அனுமதிக்க முடியாது இது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயம் என தெரிவித்தேன். எங்களிற்கு நீங்கள் ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டுள்ளதால் நீங்கள் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என நான் தெரிவித்தேன்.

அவ்வேளை அங்கிருந்த ஒருவர் எனக்கு அடித்து விட்டு எனது ரிசேர்ச் உத்தியோகத்தருக்கு தலைக்கவசத்தால் அடித்து விட்டு அங்கிருந்து ஓடத் தொடங்கினார். என்னுடைய சாரதியும் ஏனையவர்களும் அவருக்கு பின்னால் சென்று பிடிக்க முயன்ற போதும் முடியவில்லை அவர் தப்பிவிட்டார்.

இரண்டாவது நபரை அங்கிருந்த அனைவரும் சுற்றி வளைத்தனர். நாங்கள் அவரின் அடையாள அட்டையை கேட்டவேளை அவர் அதனை காண்பிக்க மறுத்தார் தனக்கு அடையாள அட்டை உள்ளது என்பதை காண்பிக்க ஏதோ ஒன்றை கண்ணிற்கு முன்னால் காண்பித்தாரே தவிர யார் என்பதை குறிப்பிடுவதற்கு அவர் மறுத்தார்.

அந்த இடத்தில் நான் கதைத்துக் கொண்டிருக்கும் போது மைதானத்திற்கு அங்கால ஒரு வயர் வேலி காணப்பட்டது அதற்கு அங்கால இருந்து இரண்டு நபர்கள் வேலிக்கு அருகில் வந்தனர் அவர்களில் ஒருவர் சீருடையில் காணப்பட்டார் அவரிடம் துப்பாக்கி காணப்பட்டது. மற்றையவர் பொலிஸாரின் விளையாட்டு சீருடையுடன் காணப்பட்டார்.

அவர் இவையெல்லாம் எங்கட ஆட்கள் அவர்களை இப்படி தடுத்துவைத்திருக்க முடியாது உடனடியா அவர்களை விடுங்கள் என்று சத்தம்போட்டார் நான் அப்படி விடமுடியாது நீங்கள் யார் என கேட்க அவர் தூசனத்தில் ஏச தொடங்கினார். நானும் அவரை ஏசி சட்டம் தெரியாட்டி பிரச்சினை படுத்தாத என்று சொல்லி சுற்றி வளைத்து வைத்திருந்தவருடன் கதைக்க தொடங்க அங்கிருந்த அனைவரும் கத்தத் தொடங்கினார்கள்.ஏனென்றால் விளையாட்டு சீருடையில் காணப்பட்ட அவர் தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து சுடுவதற்கு தயாராகும் விதத்தில் நடந்து கொண்டுள்ளார் இது தான் நடந்தது.

# எம்.பி.கே இந்த நிலை என்றால் சாதாரண மக்கள் நிலை என்ன?




பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே மிகமோசமாக நடத்தப்படும் பட்சத்தில், வட கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்கள் இராணுவத்தினரால் எவ்வாறு நடத்தப்படக் கூடும் என்பதை ஒட்டு மொத்த உலகமும் புரிந்துகொள்ள வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை அரச புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றதோடு பிறிதொரு நபர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்கு இலக்குவைத்த சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை மருதங்கேணியில் பதிவா னது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பொலிஸ் உள்ளடங்கலாகப் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கடுமையாகக் கண்டிப்பதாகத் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே இவ்வாறு நடத்தப்படும் பட்சத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் சிங்களமொழி பேசும் பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினரால் எவ்வாறு நடத்தப்படக் கூடும் என்பதை ஒட்டுமொத்த உலகமும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மக்கள் பிரதிநிதிக்கே இந்த நிலை சந்திரகுமார் கண்டம்!



யாழ்ப்பாணம் வட மராட்சியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் நாட்டில் தமிழ் மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் நாட்டில் சுந்திரமாக செயற்பட முடியாத ஜனநாயக சூழல் காணப்படுகிறது என்றால் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமையை எண்ணிப் பாருங்கள்? அவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதனை சிந்தித்து பாருங்கள் எனத் தெரிவித்துள்ள அவர் தன்னுடைய மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கேட்டறிவதற்கு கூட ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் சுந்திரம் இல்லாத நிலைமை வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பன தமிழ் மக்கள் மீது யுத்தம் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தும் இடம் பெற்று வருகிறது. இது இனங்களின் நல்லிணக்கத்திற்கும், நிலையான சமாதானத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையே குரோதத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்லும். எனவே இச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் மற்றும் அவரது செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் அரசின் ஜனநாயக விரோதச் செயல் - சி.வி.கே.சிவஞானம் கண்டனம்!



பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான கொலை முயற்சியை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம் என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி வி கே சிவஞானம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மீதான கொலை முயற்சி தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை அவர் தெரிவித்துள்ளார். அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது மேற் கொள்ளப்பட்ட கொலை முயற்சியையும் அவர் மீதான தாக்குதலையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். யாழ் வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் சந்திப்பில் அவர் ஈடுபட்டிருந்த போது அங்கு புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அவர் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர் மீது தாக்குதலும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவதை நாம் இலங்கை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம். நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல் இவற்றை தடுக்க முன்வரவேண்டும். இவ்வாறு தமிழர் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் அரச புலனாய்வாளர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதலானது ஏனைய அரசியல் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விடுக்கும் அச்சுறுத்தலாகவே நாம் பார்க்கின்றோம் என்றுள்ளது.

## ஸ்ரீதரன் கண்டனம்

பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மருதங்கேணிப் பகுதியில் பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால்



ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமை இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறையையே என பாராளுமன்ற உறுப்பினர்.சிவஞானம் சிறீதரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. மக்கள் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற் கொள்ளப்பட்டுள்ள இக் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# தமிழ்த்தேசிய முன்னணி முன்னாள் போராளிகளை வைத்து சந்தர்ப்பவாத அரசியல் செய்வதாக ஜனநாயகப்போராளிகள் கட்சி விசனம்



தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னாள் போராளிகளை வைத்து சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொள்வதாக ஜனநாயக போராளிகள் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. தமது அரசியலுக்காக முன்னாள் போராளிகளை குறித்த தரப்பினர் பயன்படுத்துவதாகவும் அந்தக் கட்சியின் செயலாளர் கதிர் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி விமர்சித்த நிலையில் அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுடைய அரசியல் அணியின் தொடர்ச்சியாக எந்த அணிகளையோ அல்லது தாயகத்தில் இருந்த அரசியல் கட்சிகளையோ தலைமை நியமிக்கவில்லை. அவர்களிடம் எந்தப் பொறுப்புகளும் வழங்கப்படவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்குகின்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட ஒரு மாத காலப் பகுதிக்குள்ளேயே தமிழ் தேசிய பரப்பிலிருந்து வெளியேறிச் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியென பொய்யான மாயையை மக்கள் மத்தியில் காட்டிக்கொண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்று பொய்யான ஒரு கட்சியை உருவாக்கிக் கொண்டு இன்று தமிழ் தேசிய அரசியல்வாதிகளாக செயற்படுகின்றார்கள். ஆனால், இவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

விடுதலைப் புலிகளுடைய வரலாறு என்பது மிகவும் கனதியானது. அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடந்து வந்தவர்கள். அந்த விடயங்களை நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம் என்று அவர்களிடம் நாங்கள் பல தடவைகள் கூறி இருக்கின்றோம். ஆனால் இன்றும் அவர்கள் இந்த விடயத்திலே மீண்டும் மீண்டும் தலையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

உண்மையிலேயே இந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர் வெளிநாடுகளில் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களை காரணம் காட்டி பல கோடிகளை மோசடி செய்து அதனை போராளிகளுக்கும் மக்களுக்கும் வழங்காது தங்களது சந்தர்ப்பவாத அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியுள்ளனர்.

போராளிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் கீழ்த்தரமான நிலையில் வளர்க்கவில்லை. தனித்துவமான முறையில் தங்களது பொருளாதார நிலைமையை வளர்த்துக் கொள்வதற்கான அடிப்படைகளையும் தலைவர் கொடுத்திருக்கின்றார். அரசியல்வாதிகளிடம் கையேந்த வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கக் கூடாது என்பது தலைவருடைய சிந்தனையாக இருந்தது.

ஐபிசி தமிழின் போன்ற உறவுபாலம் நிகழ்ச்சி, புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற மக்களுடைய உதவித் திட்டங்கள் போன்ற பல வகையான விடயங்களை நாங்கள் வரவேற்கின்றோம்.

உண்மையாக போராளிகளை நேசிக்கின்றவர்களும் தமிழ் தேசியத்தை நேசிக்கின்றவர்களும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நாங்கள் தொடர்ச்சியாக வரவேற்போம்.

ஆனால் இவர்களைப் போன்று கீழ்த்தரமாக போராளிகளை சித்தரிப்பது, அவர்களது பலவீனமான நிலைப்பாடுகளை வெளியிலேயே காட்டுவது, போராளிகளுக்கு மதிப்பளிக்காது அவர்களை கொச்சைப்படுத்துவது போன்ற விடயங்களை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றார்.


உடன் இறைச்சி விநியோகம்

பிறந்தநாள் விழாக்கள், ஊர் ஒன்றுகூடல்கள், வீட்டுக் கொண்டாட்டங்கள் மற்றும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு ஊர் ஆட்டிறைச்சி சிறு சிறு துண்டுகளாக மொத்தமாகவும் சில்லறையாகவும் துப்பரவாக வெட்டிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு

ஸ்ரீ 647 328 8880 சானு 416 456 3051

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 36 ஆண்டுகளுக்கு முன் “லிபரேஷன் ஒப்பரேஷன்” இராணுவம் நடத்திய முதல் போர்!

நாட்டின் இறுதிக்கட்ட போரில் செய்யப்பட்ட இனப் படுகொலைகளையும், போரில் உயிர் நீத்தவர்களையும் நினைவு கூரும் பல நிகழ்வுகளை கடந்த மே மாதம் பல்வேறு இடங்களில், குறிப்பாக, வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலும், புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் இடம் பெற்றது.

யுத்தம் முற்றுப் பெற்று 14 ஆண்டுகள் நிறைவடைந்து விட்ட நிலையில், போர் முரசு கொட்டப்படுவதற்கு முதற்புள்ளி இடப்பட்டது எப்போது, யாரால் என்பதை அறியாத தரப்பினருக்கே இந்த பதிவு.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவே 1987 மே 26 அன்று முதல் முதலாக யுத்தத்தை ஆரம்பித்தார். யாழ். குடாநாட்டை அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக அவர் புலிகளுக்கு எதிராக வடமராட்சியில் போரிட முன்னின்றார். அதன் பின்னர், இந்தியாவின் தலையீட்டால் அந்த போர்க்கொதிப்பு தற்காலிகமாக தணிந்தது.

அன்று ஜே.ஆர். ஆரம்பித்த யுத்தத்தை 2009 மே 18ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடித்து வைத்தார்.

1987 மே, ஜீன் மாதங்களில் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்காக இராணுவத்தினரால் ‘லிபரேஷன் ஒபரேஷன்‘ ‘விடுதலை நடவடிக்கை‘ என பெயரிடப்பட்டது. வடமராட்சிக்கு பின்பு குடாநாட்டின் ஏனைய பகுதிகளையும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்போம். புலிகள் ஏனைய தமிழ் இயக்கங்களை தடை செய்து, தனித்து இயங்கியதால் அவர்களை அழிப்பது சுலபமானது’ என அன்றைய அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியிருந்தார்.

பிரபாகரனும் மூத்த தலைவர்களும் அவர்களோடு ஏராளமான ஆயுதங்களும் வல்வெட்டித்துறையில் இருப்பதாக எமது புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல்களே லிபரேஷன் ஒபரேஷனை முன்னெடுப்பதற்கான முக்கிய காரணம்’ என கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க'Adventurous Journey: From Peace to War Insurgency to Terrorism' எழுதிய என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விடுதலைப் புலிகளுக்கு இந்திய உளவுப் பிரிவு ‘றோ‘ (RAW) ஆயுதங்களை வழங்குவது எமக்கு தெரிய வந்தது. எனினும், இந்திய அரசும் றோவும் இதனை மறுத்தன.

புலிகளை முற்றாக ஒழிப்பதற்கு இலங்கை படையினரை இந்தியா அனுமதிக்காது. காயமடைந்த புலிகள் சிகிச்சைக்காக கடல் வழியாக தமிழ்நாட்டுக்குச் செல்வதையும் நாம் அறிவோம்.

1987ஜீன் 4ஆம் திகதி இந்திய விமானங்கள் உணவுப் பொருட்களை யாழ். குடாநாட்டில் போட்டதால், வடமராட்சி போரை நிறுத்துமாறு ஜனாதிபதி ஜெயவர்தன எனக்கு உத்தரவிட்டபோது நான் மறுத்தேன். இதனால் கோபமடைந்த அவர், ‘இந்தியாவுடன் நாம் போர் புரியமுடியாது‘ என்றார்.

போர்க்களத்தில் இத்தகவலை படையினருக்கு கூறி போரை நிறுத்துமாறு அறிவித்த போது அவர்களின் முகத்தில் ஏமாற்றத்தை கண்டேன். படையினர் ‘இந்தியா எப்படி இதனை செய்யலாம்‘ எனவும் கேட்டனர். அத்தோடு, ‘லிபரேஷன் ஒபரேஷன்‘ நிறுத்தப்பட்டது’ எனவும் ஜெனரல் ரணதுங்க அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1987 மே 26 காலை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும், அதனால் மக்களை ஆலயங்கள் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வானொலியில் அறிவிக்கப்பட்டதுடன், ஹெலிகொப்டர்களில் இருந்தும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

அதனையடுத்து, மக்கள் பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சமடைந்தனர். யாழ். குடாநாட்டில் முதல் முதலாக மக்களின் இடம்பெயர்வு வடமராட்சியிலேயே இடம்பெற்றது. மாட்டு வண்டில்கள், லாண்ட்ரமாஸ்ரர், உழவு இயந்திரங்கள், சைக்கிள்களில் தமது பொருட்களுடன் அதிகாலையில் இருந்து தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு நோக்கி சென்றனர்.

அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்தின் மீது 1987 மே 29 நடத்தப்பட்ட எறிகணை வீச்சால் அங்கு தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். சிலரின் உடல்கள் உருக்குலைந்தன. பலர் காயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு செல்லமுடியாத நிலையில் காணப்பட்டனர்.



அப்போரில் சுமார் 8000 படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். எறிகணைகள், விமானக் குண்டுவீச்சுகள், ஹெலிகொப்டர்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்களால் குடாநாடே அதிர்ந்தது. இராணுவப் படையினர் வருவதைத் தடுக்க விடுதலைப் புலிகளும் போராடினர். அன்றைய காலகட்டத்தில் புலிகளிடம் போதிய ஆட்பலம் இருக்கவில்லை.

தொண்டமானாறு முதல் பல திசைகளிலும் இராணுவத்தினர் முன்னே விரைந்து சென்றனர். மணற்காடு, மண்டான், முள்ளி பகுதிகளில் ஹெலிகொப்டர்கள், கடற்படை படகுகள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழந்தனர்.

அந்த தாக்குதல் நடவடிக்கையின் பின்னர் வடமராட்சி பகுதி 1987 ஜஜீன் 1ஆம் திகதி இராணுவப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பல இடங்களில் இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டன. சுமார் 5000 இளைஞர்கள் சுற்றி வளைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, கப்பல் மூலம் காலி பூசா சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். சில இளைஞர்கள் ஓட விட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் போது நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். பெருமளவினர் காயமடைந்தனர்.

இந்நிலையில், வடமராட்சியில் இருந்து ஏனைய இடங்களுக்கு செல்வதற்கு கொடிகாமம் வீதியை மட்டுமே பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டு, முள்ளி சந்தியில் சோதனை நிலையமும் அமைக்கப்பட்டது. அத்தோடு, வல்லை வீதியும் மூடப்பட்டது. நடந்த போர் நடவடிக்கையில் இந்தியா தலையிடாமல் இருந்திருந்தால், வெளிநாடுகளின் உதவியுடன் யுத்தத்தையும் முடித்து விடுதலைப் புலிகளையும் ஒழித்திருப்பேன் என ஜனாதிபதி ஜெயவர்தன அப்போது இந்திய ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தார்.

புலிகளுடன் நாம் யுத்தம் புரியும் போது தடுத்தீர்கள் இன்று உங்களுக்கு வீண் செலவுகளும் பாரிய அழிவுகளுமே எஞ்சியுள்ளது’ என 1987 ஒக்டோபர் 10ஆம் திகதி விடுதலைப் புலிகள் – இந்திய படை மோதல் ஆரம்பமான போது ஜனாதிபதி ஜே.ஆர். அன்றைய இந்திய உயர்ஸ்தானிகர் ஜே.என்.டிக்சிற்றிடம் கூறினார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.சி.பந்த் கொழும்பில் ஜனாதிபதி ஜே.ஆரை சந்தித்து புலிகளுக்கு எதிராக இந்திய படையினர் யுத்தத்தை ஆரம்பிக்க அனுமதி கேட்டபோதும், ’நானும் இதனையே செய்தபோது கண்டித்தீர்கள்! எனது படையினரின் போரை உங்கள் படையினர் இப்போது முன்னெடுக்கின்றனர்’ என்றே கூறினார்.

ஆக, வடமராட்சி போருக்குப் பின்னர், ஜீன் 4ஆம் திகதி அச்சுவேலி ஊடாக படை நகர்வை ஆரம்பித்து, யாழ். குடாநாட்டை முழுமையாக அரச கட்டுப்பாட்டில் கொண்டுவர அரசு முடிவு எடுத்தது.

ஜீன் 4 இந்திய விமானம் மூலம் உணவுப்பொருட்கள் குடாநாட்டில் போடப்பட்டதால் போர் நிறுத்தப்பட்டது. சுதந்திரமடைந்த பின்னர், நாட்டில் இடம்பெற்ற பாரிய படை நடவடிக்கை லிபரேஷன் ஒபரேஷனே ஆகும்.

1971 ஏப்ரலில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) ஆயுதப் போராட்டத்தை ஒழிக்க விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணை தாக்குதல்கள் இடம் பெற்றதில்லை. சிங்கள மக்களும் அகதிகளாக இடம்பெயர்ந்ததில்லை.

1971 – சிறிமாவோ ஆட்சியில் ஜே.வி.பி. சிங்கள இளைஞர்கள் கைதாகி விசேட நீதிமன்றத்தால் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

1977 – பதவிக்கு வந்த ஜே.ஆர். அந்த சிங்கள இளைஞர்களுக்கு மன்னிப்பளித்தார். ஆனால், தமிழ் இளைஞர்களை தடுத்துவைக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை 1979இல் அமுல்படுத்தினார்.

இறுதிப்போர் 2009 மே 18 முடிவடைந்த பின்னர் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ இந்திய ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

யுத்தம் ஆரம்பமானதன் பின்னர் நான்கு ஜனாதிபதிகள் ஆட்சியில் அந்த போரை நிறுத்த முடியாமல் போனதற்கான காரணங்களை ஆராய்ந்தோம். படையினர் எண்ணிக்கையை அதிகரித்தோம். பல திட்டங்களை வகுத்தோம். வெற்றி பெற்றோம்’ என குறிப்பிட்டிருந்தார். எனவே, போரின் ஆரம்பகட்டத்தில் இராணுவத்தினர் எடுத்த நடவடிக்கைகள், சதித் திட்டங்களையும் கூட இனப் படுகொலை நினைவேந்தல்கள் நினைவில் நிறுத்துகின்றன.



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

03 யூன் 2023 முதல் 09 யூன் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினம் சபாரெத்தினம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினம் சபாரெத்தினம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 06 யூன் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினம் சபாரெத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரம்பலம் முருகேசபிள்ளை

புளியங்கடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 08 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 08 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாள் 05 யூன் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்





### திரு செல்லையா சோமசுந்தரம்
### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 10 யூன் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளனர். திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




05 யூன் 2023 திங்கட்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் றோட்டை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 யூன் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சுதா சண்முகராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சுதா சண்முகராஜா அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




06 யூன் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி குகதாசன் கலா தம்பதிகளின் செல்வப்புதல்வி தர்ஷி குகதாசனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி தர்ஷி குகதாசன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 யூன் 2023 செவ்வாய்க்கிழமை காரைநகரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினம் சபாரெத்தினம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 யூன் 2023 வியாழக்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி திலகவதி திருஞானசம்பந்தர் அவர்களது 6வேது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 யூன் 2023 வியாழக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் மிஸிசாகா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 யூன் 2023 வியாழக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களது 3வத ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 யூன் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் புதுமனைப் புகுவிழாவின் ஓராண்டு நிறைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



31 மே 2023 புதன்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



# PREMIER DIAGNOSTIC NETWORK

PDXN

**647·660·0699**
www.pdxn.ca

Scan for Online Booking

## RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD

North of Ellesmere & Bellamy

**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD

South of Brimley & Sheppard

**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

### ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

### FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

# இலங்கையில் மாற்றம் ஏற்படாத நிலையில் கொழும்பில் பொது நினைவுச் சின்னம்?

அரசாங்கம் போரில் உயிர் நீத்த அனைவருக்குமாக ஒரு பொதுவான நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. தமிழ்க்கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன் சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

போரில் உயிர் நீத்த எல்லாருக்குமான நினைவுச் சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது. ஆளடையாளம் இருக்காது. அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காது தோல்வியையும் பிரதிபலிக்காது .குறிப்பாக, நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் நிலை மாறுகால நீதி தொடர்பான வாதப்பிரதிவாதங்களின் போது ஒரு விடயம் சுட்டிக் காட்டப்படுவதுண்டு. இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதே அது. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள் தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. உளவியல் மோதல் இப்பொழுதும் உண்டு.

ஆயுத மோதல் ஒரு காரணம் அல்ல. அது விளைவு தான். ஆயுத மோதல்களுக்கு காரணம் இன ஒடுக்குமுறை தான். எனவே இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரும்பொழுதே இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படும். அதாவது போருக்கு பிந்திய, அல்லது பிணக்குக்கு பிந்திய, என்று அழைக்கத்தக்க ஒரு நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் ஏற்படவில்லை

உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. பொருத்தமான பொருளாதார விடுதலை இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் கறுப்பின மக்கள் ஒப்பீட்டளவில் அரசியல் விடுதலையை அனுபவிக்கும் ஒரு சூழல் அங்கே உருவாகி விட்டது. அதனால் தான் நிலைமாறுகால நீதியை அங்கே ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால் இலங்கைத் தீவில் நிலைமை அப்படியல்ல. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள் தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. மோதல்களுக்குக் காரணமான இன ஒடுக்குமுறை இப்பொழுதும் உண்டு.அதனால் தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.சிங்கள பௌத்த மயமாக்கல் எனப்படுவது இனக் ஒடுக்குமுறையின் ஒரு பகுதி தான். தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் அம்சங்களை அழித்து ஒழிப்பது,தமிழ் மக்களை ஒரு தேசமாக இல்லாமல் செய்வதுதான் இன ஒடுக்கு முறையின் பிரதான இலக்கு.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் கூறுவது போல 2009க்கு பின்னரான காலகட்டத்தை பிணக்கிற்குப் பின்னரான அதாவது இனப்பிரச்சினைக்குப் பின்னரான காலகட்டம் என்று அழைக்க முடியாது. அதுபோலவே அரசுசார்பற்ற நிறுவனங்கள் அழைப்பது போல போருக்கு பின்னரான காலகட்டம் என்றும் அழைக்க முடியாது. மாறாக நான் எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைப் போல, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான காலகட்டம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் உளவியல் மோதல்கள் இப்பொழுதும் உண்டு.

ஆயுத மோதல்களின் போது கைப்பற்றப்பட்ட நிலங்கள் இப்பொழுதும் அரசு படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் விகாரைகளை அமைத்து சிங்கள பௌத்த மயமாக்கலை முழுவதுமாக முன்னெடுத்து வருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலையங்கள் இப்பொழுதும் உண்டு. இலங்கைத்தீவின் மொத்த படைக் கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி வடக்குக் கிழக்கில் தான் உண்டு. போர் முடிவுக்கு வந்து விட்டது என்றால் எதற்காக அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக படையினரை தமிழ்ப் பகுதிகளில் பேண வேண்டும்? கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரிக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை தயார் படுத்தி வருகின்றதா?



அது தான் பிரச்சினையே. அரசாங்கம் தமிழ்மக்கள் தேசமாக இருப்பதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதனால் தான் தமிழர்கள் தேசமாக இருப்பதை அழிக்கும் விதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை திணைக்களங்களுக்கூடாக முன்னெடுக்கின்றது. எனவே இலங்கைத்தீவில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவி வரும் அரசியற் சூழலை ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு கால கட்டம் என்று தான் அழைக்க வேண்டும். இங்கு நிலை மாற்றம் ஏற்படவில்லை.

அவ்வாறு நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில், போரில் உயிர் நீத்த எல்லாருக்குமாக ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது. அதை போரில் சம்பந்தப்பட்ட அனைவரும் அல்லது போரால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை. அவ்வாறு எல்லாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சூழல் எப்பொழுது தோன்றும் என்றால், மெய்யான பொருளில் நிலை மாற்றம் ஏற்படும் பொழுது தான். இங்கு நிலை மாற்றம் எனப்படுவது இன ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டு வரப்படுவது தான். அதாவது இலங்கைத்தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்குவதுதான்.

எனவே இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத்தீவின் பல்லினச் சூழலை பல்மதச் சூழலை பல மொழிச் சூழலை உறுதிப்படுத்தாதவரை நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டி எழுப்பாதவரை எல்லாருக்கும் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது.

ஏனெனில் போரில் உயிர் நீத்தவர்கள் என்பது ஒரு பொதுவான வகை. அதற்குள் போராளிகள் வருவார்கள். படைத்தரப்பு வரும். பொதுமக்கள் வருவார்கள். சில சமயங்களில் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அதன்படி போருக்கு பின்னரான ஒரு பொது நினைவுச் சின்னம் எனப்படுவது கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களையும் இனப்படுகொலை புரிந்தவர்களையும் இனப்படுகொலைக்கு ஆளாகியவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் சின்னங்களாகவே அமைய முடியும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பட்சத்தில் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கலாம். ஆனால் நீதிக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக காணப்படும் ஒரு நாட்டில், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் கொண்டாடும் ஒரு நாட்டில், கொலை செய்தவரையும் கொல்லப்பட்டவரையும் ஒன்றாக ஒரு சின்னத்துக்குள் கொண்டு வருவது சாத்தியமே இல்லை. அதுமட்டுமல்ல பொத்தாம் பொதுவான ஒரு நினைவுச் சின்னம் எனப்படுவது இனப்படுகொலையால் உயிரிழந்தவர்களை போரில் உயிர் இழந்தவர்கள் என்ற ஒரு பொதுவான வகைக்குள் அடக்கி விடும். இனப்படுகொலையால் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது அங்கே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் ஓர் அரசியல் இருக்கும். ஆனால் போரில் உயிர் நீத்தவர்கள் என்று வரும் பொழுது அது நீதிக்கான ஓர் அரசியலை குறிக்காது. இது தமிழ் மக்களைப் பொறுத்வரை அவர்களுடைய நீதிக்கான கோரிக்கையை மழுங்கடிக்கும் ஒரு நடவடிக்கை என்றே பார்க்கப்படும். ஏனென்றால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால் தான் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் சாத்தியப்படும். நல்லிணக்கத்தை உருவாக்கினால் தான் ஒரு பொது நினைவுச் சின்னம் சாத்தியப்படும்.

எனவே முதலில் மூன்று இனங்களுக்கும் இடையிலே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இது முதலாவது விடயம்.

இரண்டாவது விடயம்,தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தில் உயிர் நீத்த அனைவருக்குமாக ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய சூழல் இன்றுவரை உருவாகவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அப்படி ஒரு நினைவு சின்னத்தை உருவாக்குவது என்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்குமான ஒரு பொது நினைவு நாளை கண்டு பிடிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியலில் ஒவ்வொரு இயக்கங்களுக்கும், கட்சிக்கும், தனிநபர்களுக்குமான நினைவு நாட்களும் நினைவுச் சின்னங்களுந்தான் உண்டு. ஒரு பொதுவான நினைவு நாளை கண்டு பிடிக்கும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



அளவுக்கு தமிழ்த் தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் இனிமேற்றான் செழிப்படைய வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு பொது நினைவுச் சின்னத்துக்கு இப்பொழுதும் வாய்ப்பில்லை.

அவ்வாறான ஒரு பொது நினைவுச் சின்னத்தை குறித்து நான் ஏற்கனவே எழுதி உள்ளேன். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் முன் வைக்கும் வாதம் என்னவென்றால், தியாகிக்கும், துரோகிக்கும் ஒரேடியாக நினைவுச் சின்னத்தை அமைப்பதா என்பதுதான்.

அவர்களுக்கு பொது நினைவுச் சின்னம் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உலகில் இதுவரை உருவாக்கப்பட்ட இது போன்ற பொது நினைவு சின்னங்களுக்கு முகம் கிடையாது. தனிப்பட்ட கட்சி அல்லது இயக்க அடையாளம் கிடையாது. அந்நினைவு சின்னம் அரூபமானது. அது தமிழ் மக்களுக்காக போராட வந்த எல்லோருக்குமானது ஒரு இயக்கத்துக்கு உரியது அல்ல. ஒரு கட்சிக்கு உரியது அல்ல. அது பொதுவானது. ஒரு தேசத்துக்கானது. ஆனால் அப்படி ஒரு நினைவுச் சினத்தை சின்னத்தை தமிழ் மக்கள் இன்றுவரை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறார்கள்.

அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து உரையாடும் பொழுது இங்கு தென்னாபிரிக்க உதாரணத்தைக் காட்டலாம். தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்காவில்" அவ்வாறான ஒரு சின்னம் உண்டு.அந்த நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட அந்தந்த பிராந்தியங்களின் மண்ணின் இயல்பைப் பிரதிபலிக்கும் பாறைகள் அங்கே ஓர் ஒழுங்கிற்குள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளுக்கு இடையிலான நிலப்பரப்பிலிருந்து புகை எழுந்தபடியிருக்கும். தென்னாபிரிக்கர்களைப் பொறுத்தவரை புகையானது இறந்தவர்களின் ஆத்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு ஊடகமாகக் கருதப்படுகிறது. தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்கா என்று அழைக்கப்படும் நினைவு வளாகமானது இனப்படுகொலைக்கு எதிரான ஒரு நினைவு வளாகமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளாகம் அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் எதிராக தென்னாபிரிக்கர்களை அடிமை கொண்ட டச்சு ஆக்கிரமிப்பாளர்களின் நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்து விட்டது. அதை விட முக்கியமாக அங்கே நெல்சன் மண்டேலா என்ற ஒரு மகத்தான ஆளுமை இருந்தது. அது நல்லிணக்கத்திற்கு தலைமை தாங்கியது.நிலை மாறு கால நீதிச் செய்முறைகளுக்கு தலைமை தாங்கியது. எனினும் அங்கே போரில் ஈடுபட்ட வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஆறாத காயங்கள் இப்பொழுதும் உண்டு. பகையும் வன்மமும் பழிவாங்கும் உணர்ச்சியும் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தென்னாபிரிக்காவில் ஒரு சுதந்திரப் பூங்காவை உருவாக்கியது போன்று (22ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி:- நேற்று - இன்று - நாளை

(சென்றவாரத் தொடர்ச்சி) விவசாய மாவட்டமாக உள்ள கிளிநொச்சியில் 09 பாசனக் குளங்கள் உள்ளன. வடக்கின் மிகப்பெரிய குளமான இரணைமடுவும் கிளிநொச்சியில்தான் உண்டு. வடக்கின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற




கிளிநொச்சியில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை மேம்படுத்தும் திட்டங்கள் இல்லை. நெல்லை அடுத்த நிலை உணவுப் பொருட்களாக மாற்றும் வழிகளைப் பற்றிச் சிந்திப்போரில்லை. இதனால் அறுவடை செய்யப்படும் நெல் முழுவதும் வெளி மாவட்டங்களுக்கு மிகக்குறைந்த விலையில் செல்கிறது.

இதைக்குறித்துப் பேசக் கூடிய — சிந்திக்கக் கூடிய கமக்காரர் அமைப்புகள் இல்லை.

நெல்லுக்கு அப்பால், மரமுந்திரிகை, தென்னை, பழச் செய்கை, பாலுற்பத்தி, கால்நடை வளர்ப்பு போன்றவையும் கிளிநொச்சியின் வேளாண்மையில் சேர்த்தி இவற்றை மேம்படுத்தும் முயற்சிகள் இல்லை.

அரசாங்கத்தினாலும் யப்பான், இந்தியா உள்ளிட்ட பல வெளிநாடுகளினாலும் விவசாயத்துறையின் மேம்பாட்டுக்கென வழங்கப்பட்ட உதவித்திட்டங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கமநலசேவை நிலையங்களிலும் 20, 30 என புதிய உழவு இயந்திரங்கள் பழுதாக்கப்பட்டுக்கிடக்கின்றன. இவை இந்தியாவினால் வழங்கப்பட்டு இன்னும் பத்து ஆண்டுகள் முழுதடையவில்லை. அதற்குள் இந்த நிலை. இதைக் குறித்து யாரும் பேசுவாருமில்லை. இப்படித் தான் கூட்டுறவுத்துறையிலும் பெரும் முடக்கம் நிகழ்ந்துள்ளது.

மாவட்டத்தின் நலனைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல் தலைமை கிடையாது.

இதுதான் இங்கே உள்ள நிலைமை. இதையெல்லாம் ஏதோ குறைகாண் நோக்கில் சொல்லவில்லை. இந்தக் குறைகளை நீக்கி எழ வேண்டும் என்ற விருப்பிலேயே சொல்கிறேன்.

கிளிநொச்சியின் உருவாக்கம் ஏறக்குறைய 100 ஆண்டுகள்தானே. அதற்குள் எப்படி மிகப் பெரிய அளவில் இவற்றை எதிர்பார்க்கலாம் என்று யாரும் கேட்கக் கூடும். கரைச்சிப் பிரதேசத்தைத் தவிர்ந்தவை பாரம்பரிய மானவை.

இதைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் நிலைமை என்னவோ கெடுகுடி சொற்கேளாது என்ற மாதிரித்தான் உள்ளது. படித்தவர்கள் கூட இதை, இந்த நாகரீகக் கேட்டையும் ஜனநாயக விரோதப் போக்கையும் கண்டிப்பதாகத் தெரியவில்லை. இதனால்தான் கிளிநொச்சி வரவரப் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. கிளிநொச்சிச் சமூகம் என்பது தனித்தனிக் கூறுகளாளப் பிளவுண்டு கொண்டே செல்கிறது…

அபிவிருத்தியைப் பற்றிப் பேசினால், அது ஏதோ ஒரு குறிப்பிட்ட தரப்பு மட்டும் உரித்தானது. அதைத் திட்டமிடக்கூடியவர்கள் தாங்கள் மட்டுமே என்று அதிகார நிலைப்பட்டுச் செயற்படுகின்றனர்.

ஒரு புத்தக வெளியீடு என்றால் அதற்கு ஒரு குறிப்பிட்ட அரசியற் தரப்பினர் மட்டும் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தமக்குக் கிடைக்கின்ற மேடையை தமது அரசியல் நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். ஏனையோரைத் தாக்கிப் பேசி, வசை பாடி ஓரம் கட்டவும் முற்படுகின்றனர். பாடசாலை நிகழ்வுகள் தொடக்கம் அதிபர், ஆசிரியர் நியமனங்கள் வரையில் அரசியல் ரீதியாகவே அனைத்து நடவடிக்கைகளும் உள்ளன.

இந்தப் போக்குப் பகைமைக் கூறுகளை உள்ளடக்கியதால் ஒருவரை ஒருவர் முகம் பார்க்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பகைமை செழித்துள்ளது.

அரசியல் என்பது சமூகத்தை ஈடேற்றுவதற்கு வழிவகையைச் செய்ய வேண்டுமே தவிர, சமூக வளர்ச்சியைப் பாதிப்பதாக அமையக்கூடாது. சமூகத்தைத் தன்னுடைய நலனுக்காகப் பிரித்து நாசமாக்க முடியாது. ஆனால், அதுதான் நடக்கிறது.

**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**



சமூகத்தில் நிலவும் பல்சிந்தனைக்கு இடமளித்துச் செயற்பட வேண்டும். மறு சிந்தனைகளை நிராகரிக்க முற்பட்டால் வளர்ச்சி தடைப்படும். முரண்கள்தான் வளர்ச்சிக்கான அடிப்படையைப் புரிந்து கொள்ளாததன் விளைவே இது. எதிர்த் தரப்பை அல்லது மறுதரப்பை அதற்குரிய ஜனநாயக அடிப்படை உரிமைகளோடு மதிப்பதற்குப் பதிலாக, அந்தத் தரப்புக்குரிய நியாயத்தையும் அதற்கான இடத்தையும் மறுதலிப்பது நிகழ்கிறது.

வடக்குக் கிழக்கிலே உள்ள பிற மாவட்டங்களில் இல்லாத ஒரு சீரழிந்த அரசியற் கலாச்சாரம் கிளிநொச்சியில் தானுண்டு. ஆட்களுக்குக் குறிசுடும் வியாதி இது. இது அவதூறுக் கலாச்சாரமாக வளர்ந்து இன்று இந்த நிலைமைக்கு வந்துள்ளது.

குறுகிய வழியில் அரசியல் ஆதாயத்தைத் தேடுக் கொள்வதற்காக செய்த உத்திகள் இன்று சமூகத்தைப் பிளவுபடுத்தி, மாவட்டத்தின் வளர்ச்சியையே பாழடித்துள்ளது. (தொடரும்)

# யாழ்.மாவட்ட காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல்



யாழ் மாவட்டத்தில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று 06 யூன் 2023 செவ்வாய் கிழமை இடம் பெற்றது,

யாழ். மாவட்டத்தில் படையினர் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன் முயற்சியில், ஜனாதிபதியின் செயற்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், காணிகளை விடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற் கொள்ளக்கூடிய குழு ஒன்றினை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய குறித்த குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கக் கூடிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, வலி வடக்கு பிரதேசத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுடமையாக்குவது தொடர்பாக வர்த்தமாணி வெளியிடப்பட்ட சுமார் 6000 ஏக்கர் காணிகளில சுமார் 3000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப் பட்டிருப்பதால் குறித்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், காணி விடுவிப்பு தொடர்பான தெளிவுட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்கு தேவையான காணி அளவீடுகளை மேற் கொள்வதற்கும், இன்னும் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றுவதற்கும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கலந்துரையாடலில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தையிட்டியில் அமைக்கப் பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

குறித்த போராட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எம் இனிய வாசகர்களின் கவனத்திற்கு!

**எமது இனிய வாசகர்களே! உங்கள் அபிமான ஈழநாடு எதிர்வரும் யூலை 07, 14 திகதிகளில் வெளிவராது. 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை வழமை போன்று வெளிவரும். அதேவேளை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் உணவளிக்கும் செயற்பாடுகள் வழமை போன்று தவறாது நடைபெறும். (01 யூலை முதல் 21 யூலை வரையான உணவளித்தோர் விபரங்களும் ஒளிப்படங்களும் 21 யூலை 2023 வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். தொடர்புகளுக்கு 416 841 9600**

# தமிழின விரோத செயற்பாடுகளை ஊதி வளர்க்கும் அரசியல்வாதிகளின் வாரிசுகளுக்கு என்ன நடந்தது?

இனவாதமும் மதவாதமும் ஒன்றுடனொன்று இணைந்ததாக இப்போது இலங்கையை ஆட்சி புரிகிறது. அரசியல்வாதிகளையும் ஆட்சியாளர்களையும் பொறுத்தளவில் இவையிரண்டும் அவர்களுக்கு செல்லப்பிள்ளைகள்.

எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் சிங்களமும் பௌத்தமுமே அவர்களுக்கு இரட்டைக் கண்கள். இதனை நன்குணர்ந்த ரணில் நன்றாகவே இதற்கு தீனி போட்டு வளர்க்கிறார். தமது சொந்தக் கட்சியின் பலமில்லாத இவரது அரசியல் வாழ்வுக்கு இது அத்தியாவசிய தேவையாகவுள்ளது.

ரணிலின் அரசியல் பாணி பற்றி பல தடவை இப்பந்தியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. ஒரு பிரச்சனையை நன்றாக வளர்த்து விட்டு, அதனை முக்கியமற்றதாக மாற்றுவதற்கு புதிய பிரச்சனையை உருவாக்குவதே இவரது பாணி.

இலங்கையின் இனப் பிரச்சனைக்கு கடந்த பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் தீர்வு காணப்போவதாக முன்னர் அறிவித்தவர் இவர். இப்போது அதனை இந்த வருட இறுதிக்குள் தீர்க்கப் போவதாகக் கூறி மீண்டும் பேச்சுவார்த்தை என்ற நொண்டிக் குதிரையில் ஏறியுள்ளார். இங்கு தான் மதவாதம் மீளுருவாக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களம், வனபரிபாலன திணைக்களம், மகாவலி வலயம் என்பவற்றுக்கூடாக மதப்பிரச்சனையை பூதாகரமாக்கி வளர்த்து வருகிறார்.

சம காலத்தில் அதனை தீர்த்து வைக்கும் வல்லமையும் தமக்கேயுண்டு என்பது போன்ற தோற்றப்பாட்டையும் உருவாக்கி வருகிறார். இலங்கையில் சனத்தொகையில் சிங்களவர் அதிகமானவர்கள் என்பதை வைத்து அவர்களை பெரும்பான்மையினராகக் காட்டி, அவர்களின் மொழிக்கும் மதத்துக்கும் எல்லாவற்றிலும் முன்னுரிமை வழங்குவது சிங்களத் தேசியமாகி விட்டது. இதற்கேற்ப சகல அரச இயந்திரங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன.



சிங்களம் இலங்கையில் முதன்மையானது என்ற அடிப்படையில் 1944ம் ஆண்டு சட்டசபையில் ஓர் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இதனை கொண்டு வந்தவர் அதன் உறுப்பினராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன. ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தை அரச கரும மொழியாக்க வேண்டுமென்று இப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு பிரித்தானியர் சுதந்திரம் கொடுப்பதற்கு முன்னரே, இலங்கையின் அரச கரும மொழியாக சிங்களம் ஏற்கப்பட வேண்டுமென முதன்முதலாக முன்மொழிந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்பதை வரலாறு பதிவிட்டுள்ளது. 1956ல் பிரதமராகப் பதவியேற்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார். 1944ல் ஜே.ஆர். விரும்பியதை பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் பண்டாரநாயக்கா அமுலாக்கினார்.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்துடனான பிரதேச நிர்வாக முறை வேண்டுமென பிரதமர் பதவி ஏற்பதற்கு முன்னர் கருத்துரைத்த பண்டாரநாயக்க, 1956ல் பிரதமராக பதவியேற்றதும் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றி, சிங்கள மக்களின் ஏகோபித்த தலைவராக நிலைநாட்ட முயன்றார்.

அவ்வேளை வெலிமட எம்.பியாகவிருந்த கே.எம்.பி.ராஜரட்ண மிக மோசமான இனவாதத்தை நாடாளுமன்றத்தில்




கக்கினார். தமிழரின் தோலில் செருப்புத் தைத்து அணியும் நாளே தமக்கான பொன்னாள் என்று இவர் உரையாற்றிய போது நாடாளுமன்றத்தில் பண்டாரநாயக்க அணி எம்.பிக்கள் கையொலி எழுப்பி வரவேற்றனர்.

கே.எம்.பி. ராஜரட்ண சிங்கள மொழி முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக இருந்தவர். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழ் எம்.பிக்கள் சத்தியாக்கிரகம் இருந்தபோது அவர்கள் மீது தாக்குதல் நடத்திய சிங்கள குண்டர்களுக்கு தலைமை தாங்கியவர்களில் இவரும் ஒருவர்.

இவரது மனைவி குசுமா ராஜரட்ண ஊவாபரணகம தொகுதியின் எம்.பியாக இருந்தவர். தமிழின எதிர்ப்புச் செயற்பாடுகளில் கணவருக்குச் சற்றும் இளைக்காதவர் இவர். இலங்கையில் இனவெறிக் கோசங்களை முன்னெடுத்த முதலாவது பெண் அரசியல்வாதி என்று இவரைக் குறிப்பிடுவார்கள்.

தமிழின விரோத செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்ட கே.எம்.பி. ராஜரட்ணவும் அவரது மனைவியும் அடுத்தடுத்த தேர்தல்களில் தோல்வியடைந்தனர். எனினும், சிங்கள தேசம் அவரை செனட்டராக நியமித்து மதிப்பளித்தது. இந்த மதிப்பளிப்பு தமிழினத்துக்குக் காட்டப்பட்ட அபாய எச்சரிக்கை.

1981ல் யாழ்ப்பாணப் பொது நூலகம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் அமைச்சர்களது முன்னெடுப்பில் தீமூட்டி எரிக்கப்பட்டது. இதற்குத் தலைமை தாங்கியவர்கள் காமினி திசநாயக்கவும், சிறில் மத்தியுவும். இதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்த சிறில் மத்தியு 1983 யூலை மாத தமிழினப் படுகொலைகளின் பிரதானி. தமிழின சங்காரத்துக்கு பேச்சாலும் செயலாலும் தொடர்ந்து வடிவம் கொடுத்து வந்தவர்.

'யாழ்ப்பாணத் தமிழர்கள் என்ன கருதுகிறார்கள் என்பது பற்றி எனக்கு அக்கறை இல்லை. அவர்கள் மீது மேலும் அழுத்தம் கொடுத்தால் சிங்கள மக்கள் மகிழ்வர். தமிழரை பட்டினி போட்டால் சிங்கள மக்கள் சந்தோசமடைவர்' என்று 1983 யூலை 11ம் திகதி லண்டன் ரெலிகிராப் பத்திரிகைக்கு கருத்துரைத்தவர் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இதனைத் தொடர்ந்து வந்த வாரத்தில் 83 யூலை இனஅழிப்பு இடம்பெற்றது.

நாட்டின் சகல இன மக்களுக்கும் பொதுவானவரான ஜனாதிபதி இவ்வாறு இனத்துவேசமாக கருத்துக் கூறியதை சிறில் மத்தியு முழுமையாக ஏற்று தமிழின அழிப்பை 83 யூலையில் மேற்கொண்டார். எனினும், 1984ல் இவர்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட ஏதோ முறுகல் காரணமாக சிறில் மத்தியுவை ஜே.ஆர்.கட்சியிலிருந்து நீக்கினார். ஆனால் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியானதும் அவர் மீண்டும் கட்சிக்குள் இணைக்கப்பட்டதும், பௌத்தத்தை பாதுகாக்க எழுக, புலி என்பவர் யார் என்று சிறில் மத்தியு இரு நூல்களை வெளியிட்டதும், அரச ஆதரவுடன் இறுதி வரை இனவாதியாகவே அவர் வாழ்ந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டு.

1987ல் ஜே.ஆரும் ராஜீவும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றிய நாளன்று இடம்பெற்ற படை அணி வகுப்பில் கடற்படை சிப்பாய் ஒருவர் ராஜிவ் காந்தியை தாக்க முயற்சித்தார். இந்த சிப்பாய்க்கு அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர் இடம் கொடுத்து ரணசிங்க பிரேமதாச கௌரவப் படுத்தினார். தமிழருக்கு எந்த உரிமைகளும் வழங்கப்படக் கூடாதென்பதை இதனூடாக சிங்கள தேசம் வெளிப்படுத்தியது.

1989 காலப்பகுதியில் ஜே.வி.பி.யினரும் இதே வழியைத் தான் பின்பற்றினர். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறி தமிழ் வணிகர்களையும் தமிழ் பிரமுகர்களையும் கொழும்பில் படுகொலை செய்தனர். இது அப்பட்டமாக தமிழினத்தின் மீதான அரசியல் வழித் தாக்குதலாகவே வெளிப்பட்டது.

கோதபாய ஆட்சியிலும் இன்றைய ரணிலின் ஆட்சியிலும் தமிழின விரோத செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குபவராக சரத் வீரசேகர என்ற எம்.பி. அடையாளம் காணப்படுகிறார். முன்னாள் கடற்படை அதிகாரியான இவர் சிங்கள – பௌத்த மக்களின் ஏகதலைவராக தம்மை காட்டிக்கொள்ள இனவாதம் என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளார். 1980களில் யாழ்ப்பாணத்தில் இராணுவத் தளபதிகளில் ஒருவராக இருந்த மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகரவின் சகோதரர் இவர். ஆனந்த வீரசேகர ஓய்வு பெற்ற பின்னர் பௌத்த பிக்குவாக மாறி புத்தங்கல ஆனந்த என பெயர் சூடினார்.

1944 முதல் இன்று வரையான இனவாதமும் மதவாதமும் பேரெழுச்சி கொண்ட சில நிகழ்வுகளை இங்கு நினைவுக்கு உட்படுத்தியதற்கு முக்கிய காரணம் உண்டு.

சிங்கள மக்களுக்காக அவர்களின் காவ

**கட்டுரையாளர்:**
**– பனங்காட்டான் –**

லர்களாகவும் உரிமைக்குரல்களாகவும் தங்களை அடையாளம் காட்டி அதற்காக இனவாதத்தை புகுத்தி, தமிழினத்தை கருவறுக்க முனைந்தவர்களை – அவர்களின் வாரிசுகளை அதே சிங்கள மக்கள் இன்று எவ்வாறு நினைவில் வைத்திருக்கிறார்கள்?

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, கே.எம்.பி. ராஜரட்ண, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, காமினி திசநாயக்க, சிறில் மத்தியு போன்றவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு சிங்கள தேசம் எத்தகைய மதிப்பு வழங்கி அவர்களை போற்றித் துதிக்கிறது. அவர்களது சொந்தத் தொகுதி மக்களே அவர்களை மறந்தவர்களாகியுள்ளனர். தமிழரின் தோலில் செருப்பு அணிய விரும்பிய கே.எம்.பி. ராஜரட்ண, தமிழரை பட்டினி போடுவதில் மகிழ்ச்சி கண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிய எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, யாழ். பொது நூலகத்துக்கு தீமூட்டி நடனமாடிய காமினி திசநாயக்க, 83 யூலை தமிழின அழிப்பின் சூத்திரதாரி சிறில் மத்தியு போன்றவர்களின் குடும்ப வாரிசுகள் எத்தனை பேர் சிங்கள தேச அரசியலில் இன்று காணப்படுகிறார்கள். இவர்களை ஏன் சிங்கள தேச மக்கள் புறக்கணித்து வருகின்றனர்.

இன்று முன்னையவர்கள் பாணியில் இனவாதத் தாண்டவம் புரியும் சரத் வீரசேகரவும், விமல் வீரவன்ச – உதய கம்மன்பில போன்றவர்களும் சிங்கள தேச வரலாறு கற்றுத் தந்த பாடத்தை நினைவில் கொள்வார்களா? இதனை எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

நன்றி:- யாழ்.ஈழநாடு

## காலையில் கொழும்பில்....

(3ம் பக்கத் தொடர்ச்சி) சந்தித்தார். அப்போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தரப்பு பொலிஸ் என்பதால் அந்தத் தரப்பையும் விசாரிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு இருக்கிறது. ஆனால், பொலிஸார் விசாரணைகளை பக்கச் சார்பாக முன்னெடுத்து எங்கள் மீது ஓர் அடக்கு முறையை பிரயோகிக்கும் வகையிலேயே இந்த சம்பவம் கைது நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்தை நாங்கள் மிகத் தெளிவாக நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம். அந்த அடிப்படையில், இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயரதிகாரிகள் மட்டத்திலே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் நீதிமன்றில் தெரிவித்திருக்கிறோம் என்றும் கூறினார்.

# புலம்பெயர் தமிழர்களுடனான நல்லுறவை சீர்குலைப்பதே அலிசப்ரியின் கருத்து - தமிழ்க்கட்சிகள் கடும் கண்டனம்!

தமிழ் அரசியல் தலைவர்கள் புலம்பெயர் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி விடக்கூடாது என்று அமைச்சர் அலிசப்ரி வெளியிட்ட கருத்தைக் கடுமையாகக் கண்டித்து நிராகரித்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சுயநிர்ணய உரிமையை மீட்டெடுக்கும் நோக்கில் முன்னெடுத்துவரும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் இக் கருத்து அமைந்திருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

புலம்பெயர் தேசங்களில் வாழ்பவர்கள் இலங்கையில் நிரந்தர தீர்வொன்று எட்டப்படுவதை இதயசுத்தியுடன் விரும்பவில்லை என்றும், மாறாக தத்தமது தேசங்களில் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வ



தற்காக அவர்கள் இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள் என்றும் சுட்டிக் காட்டியுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எனவே புலம்பெயர் குழுக்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ் அரசியல் தலைமைகள் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தியிருக்கின்றார்.

இருப்பினும் அமைச்சர் அலி சப்ரியின் கருத்தை முற்றாக நிராகரிப்பதாகவும், அதனை வன்மையாகக் கண்டிப்ப தாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று முக்கிய தமிழ் அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலை என்பது இலங்கையின் வாழும் தமிழ்மக்கள், புலம்பெயர் தேசங்களில் வாழும் இலங்கைத் தமிழ்மக்கள் மற்றும் இந்தியவாழ் தமிழ்மக்கள் ஆகிய முத்தரப்பினரின் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டது என்று தாம் உறுதியாக நம்புவதாகவும், எனவே இவ்வாறானதொரு பின்னணியில் அமைச்சர் அலி சப்ரி வெளியிட்டுள்ள கருத்தைக் கடுமையாகக் கண்டித்து நிராகரிப்பதாக வும் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் மீண்டுமொரு மோதல் உருவாகவேண்டும் என்ற புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ்மக்கள் ஒரு போதும் விரும்பவில்லை. மாறாக அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வையே கோருகின்றனர். அவ்வாறிருக்கையில் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகிக்கக்கூடிய அலி சப்ரியின் வெளிநாட்டுப் பயணங்களின் போது, இவ் விடயம் பற்றிய அழுத்தங்கள் மிகவும் வலுவானதாக மாறி வருகின்றன. அந்த அழுத்தத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தான் அண்மையில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பில் டுவிட்டர் பதிவொன்றைச் செய்திருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இந்தக் கருத்தையும் பார்க்க வேண்டியிருக்கின்றது.

அவர் படிப்படியாக உளநோயாளியாக மாறி வருகின்றார். முன்னாள் போராளிகளைப் போன்று அவருக்கும் புனர்வாழ்வு மற்றும் உளவள ஆலோசனை ஆகியவற்றை வழங்க வேண்டியிருக்கின்றது. அதன் மூலமாகவேனும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மோதலின் பின்னரான இன ஐக்கியம் ஆகியவற்றின் உண்மையான தாற்பரியம் குறித்தும் அவற்றை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றியும் அவர் அறிந்து கொள்ளட்டும்.

எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்த மட்டில் இன சிறுபான்மையினரான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒரே நேர்கோட்டில் ஒருமித்துப் பயணிக்கக் கூடாது என்பதில் அரசாங்கங்கள் கவனமாக இருந்து வந்திருப்பதுடன் அதில் வெற்றியும் கண்டிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக தற்போது அரசாங்கத்தினால்



அமைச்சர் அலி சப்ரியும் ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகின்றார் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும், புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ்மக்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவை சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே அமைச்சர் அலிசப்ரி இத்தகையதொரு கருத்தை வெளியிட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டிய தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், அக்கருத்தை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ்மக்கள் எமக்கு அவசியமான நிதியுதவிகளை வழங்கி வருகின்றனர். இருப்பினும் அதற்குப் பதிலாக அவர்களது தேவைக்கேற்ற வாறு அல்லது நிபந்தனைகளுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என்று அவர்கள் ஒரு போதும் கூறியதில்லை. மாறாக நாம் எமது நாட்டின் நிலைவரத்தைக் கருத்திற் கொண்டு அதற்கே ற்றவாறு செயலாற்றி வருகின்றோம். அவ்வாறிருக்கையில் நாம் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடனோ அல்லது மக்களுடனோ இணைந்து செயற்படக் கூடாது என்று கூறுவதாக இருந்தால், முதலில் எமது பிரச்சினைக்குரிய தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும். அதற்குரிய திட்டத்தை எம்மிடம் கையளிக்க வேண்டும். அதனைவிடுத்து இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவ தால் எதுவும் நடக்கப் போவதில்லை' என்றும் விக்கினேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

மேலும் இது குறித்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் பின்வரு மாறு குறிப்பிட்டார்.

சுயநிர்ணய உரிமையை மீட்டெடுக்கும் நோக்கில் முன்னெடுத்துவரும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அமைச்சர் அலி சப்ரி வெளியிட்டுள்ள கருத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அரசாங்கத்திலிருந்து கிட்டும் ஓர் பதவிக்காக அவர் வெளியிடுகின்ற இத்தகைய கருத்துக்கள், சிறுபான்மையின தமிழர்களுக்கு மாத்திரமன்றி முஸ்லிம் மக்களுக்கும் அழிவை ஏற்படுத்தும். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இலங்கையில் சமஷ்டி முறையிலான தீர்வையும் கடந்தகால மீறல்களுக்கான நீதியையுமே கோரு



கின்றார்கள். இலங்கையின் ஒற்றையாட்சி முறை மற்றும் அதன்கீழ் நிகழ்ந்த அடக்குமுறைகளின் விளைவாகவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நிர்பந்திக்கப்பட்டார்கள். எனவே அமைச்சர் அலி சப்ரி தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் பேசுவதைவிடுத்து ஓர் சட்டத்தரணி என்ற ரீதியில் உண்மையைப் புரிந்து கொண்டு மனிதாபிமானத்துடன் பேச வேண்டும்' என்று வலியுறுத்தினார்.



# தமிழ்த்தேசியம்:- ஒரு தோல்வி வாதமா?

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
- யதீந்திரா -



சில தினங்களுக்கு முன்னர் விக்கினேஸ்வரன் கூறியதான ஒரு தகவல் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அதாவது, விக்கினேஸ்வரன் ஒருவரின் சாதியை கேட்டதாகக் கூறி, அவர் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. ஒரு படித்த மனிதர் இவ்வாறு கேட்கலாமா இவரை அரசியலுக்கு கொண்டு வந்தவர்கள் தவறிழைத்து விட்டனர், என்றவாறு விக்கினேஸ்வரனை பலரும் சமூக ஊடங்களில் விமர்சித்திருந்தனர்.

ஆனால் விக்கினேஸ்வரன் தான் சாதியை கேட்டதை மறுக்கவில்லை. அது பல வருடங்களுக்கு முன்னர் தனிப்பட்ட உரையாடல் ஒன்றின் போது, கேட்கப் பட்ட விடயம். இப்போது அரசியல் நோக்கத்திற்காகவே அது தொடர்பில் பேசுகின்றனர் – என்று விக்கினேஸ்வரன் பதிலளித்திருக்கின்றார்.

இந்த இடத்தில் எழும் கேள்வி. ஒரு வேளை விக்கினேஸ்வரன் வெளிப்படையாக கேட்காமல், மற்றவர்களை போன்று சாதிய மேலாதிக்க எண்ணத்தை தலைக்குள் பாதுகாத்துக் கொண்டு, உதட்டளவில் சமதர்மம் பேசியிருந்தால், அவர் ஒரு சிறந்த தமிழ் தேசியவாதிக்கான தகுதியை பெற்றிருப்பாரா? விக்கினேஸ்வரன் மேட்டுக்குடித்தனமானவர். அவரிடம் மேலாதிக்க சிந்தனை இயல்பாகவே இருக்கின்றது, என்றெல்லாம் இப்போது சேப்படுகின்றது. ஆனால் அவ்வாறான ஒருவரை முன்னிறுத்தியே தமிழ் தேசிய அரசியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு பலரும் முயன்ற கதையை நாம் எவ்வாறு இலகுவாக மறந்து விட முடியும்? விக்கினேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் அரசர்கள் வெளியில் வருகின்ற போது, ஒரு காவலாளி ஆலாவட்டத்துடன் வருவது போன்று, ஒருவர் குடையுடன் வருவார்.

விக்கினேஸ்வரன் மேடைகளில் பேசுகின்ற போது அவருக்கு குடை பிடித்தவாறு ஒருவர் மேடையில் நிற்பார். இவற்றை எவருமே தவறாக நோக்கவில்லை. எந்தத் தமிழ் தேசியவாதியும் கண்டிக்கவில்லை. இப்படியான விக்கினேஸ்வரனை தலைவராகக் கொண்டே, தமிழ் மக்கள் பேரவையின் மூலம் தமிழ் தேசிய இயக்கமொன்றை கட்டியெழுப்ப முடியுமென்று பலரும் நம்பினர்.

அதாவது, விக்கினேஸ்வரன் எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும், எங்களுக்கு, தமிழ் தேசியத் தேரை இழுப்பதற்கு ஒரு முகம் தேவைப்படுகின்றது. அதற்கு விக்கினேஸ்வரனை பயன்படுத்திக் கொள்வோம். இந்த அடிப்படையில் தான் விக்கினேஸ்வரன் பலரது தெரிவானார். இதுவே மறுபுறமாக விக்கினேஸ்வரனின் பலமாகவும் இருந்தது. விக்கினேஸ்வரனை ஈழத்து தலாய்லாமா என்று சொன்னவர்களும் உண்டு.

விக்கினேஸ்வரனின் தலைமையில் ஒரு வலுவான மாற்றுத் தலைமைத்துவத்தை உருவாக்க முடியுமென்று நம்பிச் செயற்பட்டவர்களும் உண்டு. ஆனால் ஒரு கட்டத்தில் விக்கினேஸ்வரன் தங்களின் கற்பனைகளுக்கு அதிக தூரத்திலிருக்கின்றார் என்பதை கண்டு கொண்ட போது, பலரும் விக்கினேஸ்வரன் மாயையிலிருந்து வெளியேறி விட்டனர்.

விக்கினேஸ்வரன் கேட்டதாகச் சொல்லப்படும் சாதிக் கதையானது, நம் மத்தியிலுள்ள பலருக்கும் பொருத்தமானது. பலரும் விக்கினேஸ்வரன் வெளிப்படையாகக் கேட்டதைத் தான், தங்கள் மத்தியில் காதும்காதும் வைத்தாற்போல் முணுமுணுத்துக் கொள்கின்றனர். விக்கினேஸ்வரனை அரசியலுக்கு கொண்டு வந்த சம்பந்தனும் சாதித் தடிப்பில் கூறிப்போன ஒருவர் தான். சம்பந்தனுக்கு வாக்களித்த நகரசுத்தித் தொழிலாளர் ஒருவரின் வீட்டில் சம்பந்தனை நீர்




அருந்தச் சொல்லுங்கள் – நான் இந்த அரசியல் ஆய்வுத்துறையை விட்டே வெளியேறுகின்றேன். எனவே பலரும் தங்களை சுற்றியிருப்பவர்களிடம் கேட்கும் கதையைத் தான், விக்கினேஸ்வரனும் சாதாரணமாக கேட்டிருக்கின்றார். ஆனால் மெல்லுவதற்கு விக்கினேஸ்வரன் கிடைத்ததும் தங்களை உத்தமர்கள் போல் காண்பித்துக் கொள்ள பலரும் முயற்சிக்கின்றனர்.


தமிழ் சமூகம் சாதிய அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு சமூகம் தான். இந்த சமூக அமைப்பிலிருந்து அரசியலுக்கு வருபவர்கள் எவ்வாறு இந்தக் கட்டமைப்பிலிருந்து தங்களை தூரத் தள்ளி வைப்பார்களென்று எதிர்பார்க்க முடியும்? தமிழ் தேசிய அரசியல் மிதவாத கட்சிகளான தமிழரசு கட்சி பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில், தமிழ் தேசிய அரசியலை தீர்மானித்த அனைவருமே, சாதிய நிலையில் உயரடுக்கினராக தங்களை கருத்திக் கொண்டவர்கள் தான்.

தமிழ் தேசிய அரசியலானது சாதிகளை கடந்த ஒரு விடயமென்று கூறிக் கொண்டாலும் கூட, அரசியல் பதவி நிலைகள் சாதியத்தை கடந்த ஒன்றாக இருக்கவில்லை. தமிழ் தேசிய அரசியல் இளைஞர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் தான், இந்த நிலைமையில் உடைவுகள் ஏற்பட்டன. குறிப்பாக அன்றைய சூழலில் இடதுசாரித்துவ சிந்தனையை முன்னிலைப்படுத்திய இயக்கங்களான, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) மற்றும் ஈழ புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) போன்ற இயக்கங்கள் இன விடுதலையோடு இணைந்து, சமூக விடுதலைக்கான சிந்தனைகளையும் முன்வைத்தன. இயக்கங்களின் வரவின் பின்னர் தான் சமானியர்களும் அரசியலுக்குள் பிரவேசிக்க முடிந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சமூக விடுதலை சிந்தனைகளை முன்னிலைப் படுத்திய, ஒரு இயக்கமாக இருக்காவிட்டாலும் கூட, தங்களுடைய கட்டமைப்பில் சாதிய படிநிலைகளில் கீழ் நிலையிலிருந்த சமூகங்களை சேர்ந்தவர்களுக்கு முக்கிய இடங்களை வழங்கியதன் ஊடாக, யாழ்ப்பாணிய வெள்ளாள மேலாதிக்க சிந்தனைப் போக்கின் செவிப் பறையில் அடிக்க முயற்சித்தனர். விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்புக்கள் பலவற்றில் சாதிய படிநிலையில் குறைவான பிரிவுகளை சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் காலத்தில் தான், அவ்வாறானவர்கள் அதிகாரத்திலிருக்க முடிந்தது. பிரபாகரன் வெள்ளாளர் அல்லாத சமூகத்தை சேர்ந்தவர். பிரபாகரனையும் ருகுணு விஜயவீரவையும் ஒப்பிட்டு, போக்குணம் மிக்க கராவ சமூகத்தை சேர்ந்தவர்களென்று கட்டுரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் வெள்ளாளர் சமூகத்திற்கு வெளியில், ஒருவர் தமிழ் மக்களுக்கான ஏகபோக தலைவராக இருந்த சந்தர்ப்பம் பிரபாகரன் காலத்தில் மட்டும் தான் நிகழ்ந்தது. பிரபாகரனுக்கு முன்னரும் நிகழவில்லை அதற்கு பின்னரும் நிகழவில்லை. உண்மையில் ஜனநாயக அரசியல் தளத்தில் பிரபாகரன் போன்ற பின்புலம் கொண்ட ஒருவர், ஒரு போதுமே தமிழ் மக்களின் தலைவராக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவ்வாறானதொரு நிலைமை இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

இந்தக் கட்டுரையாளரின் வாதத்தை கேள்விக்குள்ளாக்க வேண்டுமாயின், அது நிரூபிக்கப்பட வேண்டும். பிரபாகரனுக்கு அவ்வாறானதொரு இடத்தை சமூகம் வழங்கவில்லை. ஆயுத பலத்தின் மூலம் அவ்வாறானதொரு சூழலை அவர் ஏற்படுத்தியிருந்தார். விரும்பியோ விரும்பாமலோ அவரை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் அனைவருக்கும் ஏற்பட்டது. ஆனால் என்ன தான் இயக்கங்கள் சமூகத்தின் மத்தியில் உடைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, சமூக தளத்தில் சாதியவாதம் நீறு பூத்த நெருப்பாக இருந்து கொண்டேயிருந்தது. இயக்கங்களால் ஏற்படுத்தப் பட்ட உடைவுகள் சமூகதளத்தில் சிந்தனை மாற்றமாக பரிணமிக்க வில்லை. யாழ் வைதீக சிந்தனைப் போக்கில் பெரியளவில் உடைவுகள் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து, அவர்கள் செயலின் மூலம் ஏற்படுத்த முற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் புஸ்வானமாகி விட்டது. புளொட் இயக்கத்தின் செயலதிபர் உமா மகேஸ்வரன் கூறிய போன்று, யாழ்ப்பாண வெள்ளாள சமூகம் குளிரூட்டியில் கவனமாக பாதுகாத்து வைத்திருந்த சாதிய மேலாதிக்க சிந்தனைகள் இப்போது மீண்டும் துளிர் விடத் தொடங்கி விட்டது.

ஆனால் முன்னர் காணப்பட்டது போன்ற நிலையில் இப்போது சாதிய கட்டமைப்பு வலுவாக இருப்பதாக கூறி விட முடியாது. அதில் உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் ஒருவரின் சாதியை குறிப்பிட்டு அவரை ஒடுக்க முற்படும், உதாசீனப்படுத்த முற்படும் வேலையை இப்போது எவராலும் செய்ய முடியாது. ஏனெனில் சாதிய படிநிலைகளில் கீழ்நிலையில் இருப்பதாக கூறப்பட்டவர்கள் புலப்பெயர்வின் மூலமும், கல்விப் பின்புலங்களாலும் தங்களை உயர்த்தியிருக்கின்றனர். (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அரசியல் தீர்வில் உண்மையான அக்கறை இருந்தால் ஜனாதிபதி முதலில் செய்ய வேண்டியது என்ன?

-வீரகத்தி தனபாலசிங்கம் -

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை திகதி குறிப்பிட்டு அல்லது குறுகிய கால அவகாசத்திற்குள் அரசியல் இணக்கத் தீர்வைக் காணக்கூடிய ஒன்றல்ல. ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு குறுகிய காலத்திற்குள் தீர்வு காண்பது குறித்து அடிக்கடி பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் இணைய வழியாக உரையாற்றிய போது புதிய அரசியலமைப்பு ஒன்றின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணக்கூடிய அரசியல் செயற்திட்டம் ஒன்று வகுக்கப்படும் என்றும் இவ்வருட இறுதிக்குள் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கத்தைப் பெறுவதற்கு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். அத்துடன் தமிழ் கட்சிகள் ஒத்துழைப்பதற்கு தயங்குவதன் காரணத்தினால் தன்னால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வைக்காண முடியாமல் இருப்பதாகவும் கூட அவர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ் கட்சிகள் எப்போதும் ஒத்துழைப்பை வழங்கிவந்திருக்கின்றன. ஆனால், தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதல்லாத சிங்கள அரசியல் சமுதாயத்தின் நிபந்தனைகளின் வழியிலான அரைகுறைத் தீர்வொன்றுக்கு தமிழர்களின் பிரதிநிதிகளினால் இணங்க முடியாது என்பதே அடிப்படைப் பிரச்சினை.

தமிழ் கட்சிகளிடம் தயக்கம் இருப்பதாக கூறிய ஜனாதிபதி விக்கிரமசிங்க இனப்பிரச்சினையின் வரலாற்றில் இதுகால வரையில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு பிரதான காரணம் சிங்கள பௌத்த மேலாதிக்கப் போக்கும் தென்னிலங்கை கட்சி அரசியலுமே என்பதை தெரியாதவரல்ல. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அத்தகைய தீர்வு முயற்சியொன்றின் தோல்விக்கு எதிர்க்கட்சி தலைவராக அவரும் கூட பெருமளவுக்கு பொறுப்பாக இருந்தார்.

1987ஜூலை இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து மாகாணசபைகளை அறிமுகப்படுத்துவதற்கு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தான் கொண்டிருக்கும் விருப்பத்துக்கு தடையாக இருக்கும் சக்திகளையும் விக்கிரமசிங்க தெளிவாக அறிவார்.

அதனால் அரசியல் தீர்வைக் காண முடியாமல் இருப்பதற்கு தமிழ்க்கட்சிகள் பின்னடிப்பதாக அவர் காரணம் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இனப்பிரச்சினை தீர்வுக்கு காலங்காலமாக முட்டுக்கட்டையாக இருந்து வந்திருக்கும் தென்னிலங்கை சக்திகளையும் அவர் தனது மேதின உரையில் குறிப்பிட்டிருந்தால் ஒரு பொருத்தப்பாடு இருந்திருக்கும்.

என்றாலும் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்று சர்வதேச சமூகத்தின் முன்னால் அரசாங்கம் தங்கள் மீது பழியைச் சுமத்தி விடக்கூடாது என்பதற்காக தமிழ்க்கட்சிகள் தற்போது ஜனாதிபதியுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றன.

ஜனாதிபதியாக பதவியேற்று கடந்து போய்விட்ட சுமார் பத்து மாத காலத்தில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினை தீர்வு குறித்து பேசிய சந்தர்ப்பங்களை ஒரு தடவை நோக்குவோம்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைத்து முதற் தடவையாக கடந்த வருடம் ஆகஸ்ட் மூன்றாம் திகதி தனது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய அவர், தமிழ்ச்சமூகம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டியது அவசியமாகும். தமிழ் மக்கள் போரின் விளைவான சமூக மற்றும் பொருளாதார துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். தீர்க்கப் பட வேண்டிய இனப்பிரச்சினைகளும்



உள்ளன. வடக்கின் அபிவிருத்தி பணிகள் குறித்து புதிதாக சிந்திக்க வேண்டியிருக்கிறது. இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலம் அவர்களின் ஆதரவைப் பெறலாம் என்று நம்புகிறேன். தாய்நாட்டுக்கு வந்து அவர்கள் முதலீடுகளைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்” என்று குறிப்பிட்டார்.

பிறகு மூன்று மாதங்கள் கழித்து பாராளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தின் போது இலங்கையின் 75 வது சுதந்திர தினமான பெப்ரவரி 4க்கு முன்னதாக சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண விரும்புவதாக ஜனாதிபதி கூறினார். தனது முயற்சியில் இணைந்து செயற்பட முன்வருமாறு தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு சபையில் அழைப்பு விடுத்த அவர் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இன நல்லிணக்கத்துக்கான திட்டத்தை வகுக்க பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அமைச்சரவைக் குழுவொன்றையும் நியமித்தார்.

அதைத் தொடர்ந்து டிசம்பரில் பாராளுமன்றக் கட்சிகளின் மகாநாட்டை ஜனாதிபதி கூட்டினார். அந்த மகாநாட்டின் இரண்டாவது சுற்று இவ் வருடம் ஜனவரி 26 இடம் பெற்றது. இரு சுற்றுக்கும் இடைப்பட்ட நாட்களில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுடன் தனியாகவும் ஜனாதிபதி இடையில் நான்கு தடவைகள் பேச்சுக்களை நடத்தினார். இந்த பேச்சுக்களின்போதும் முன்னதாக பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டிலும் வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு உடனடிப் பிரச்சினைகள் தொடர்பில் காணப்பட்ட இடைக்கால இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறியதால் தமிழ்த் தரப்பு மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதை தவிர்த்தது. இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதி 13 வது அரசியலமைப்பு திருத்தத்தை இரு வருடங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்தார்.

அவரின் இந்த 'தைப்பொங்கல் பிரகடனத்துக்கு' எதிராக சிங்கள தேசியவாத சக்திகள் போர்க்கொடி தூக்கின. இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஆட்சியாளர்களுக்கு எதிராக நாடு பூராவும் மக்கள் செய்த கிளர்ச்சியை அடுத்து சில மாதங்களாக 'தலைமறைவாக' இருந்த இந்த சக்திகள் மீண்டும் வெளியில் வந்து இனங்களுக்கிடையில் குரோதத்தை வளர்க்கும் தங்களது நச்சுத்தனமான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியின் அந்த அறிவிப்பு எதிர்பார்த்திராத ஒரு வாய்ப்பாக அமைந்தது. முன்னைய ஜனாதிபதிகளில் எவரும் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. அதே போன்றே நீங்களும் நடந்து கொள்ள வேண்டும் என்று பௌத்த பீடாதிபதிகள் விக்கிரமசிங்கவுக்கு கூட்டாக கடிதம் எழுதினார்கள். அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தினால் நாட்டில் முன்னென்றும் இல்லாத வகையில் பெரிய இனக்கலவரம் வெடிக்கும் என்று விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்ற இனவாத அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக எச்சரிக்கை செய்து வருகிறார்கள்.

பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவான விக்கிரமசிங்கவுக்கு 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணை கிடையாது என்றும் அவ்வாறு நடைமுறைப்படுத்த விரும்பினால் ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் மக்களிடம் அவர் ஆணையைப் பெற வேண்டும் என்றும் சிங்கள தேசியவாதிகள் கூறினர்.

ஜனவரி 26 பாராளுமன்ற கட்சிகளின் இரண்டாவது சுற்று மகாநாட்டில் 13 வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப் படுத்தலுக்கு எதிராக கருத்து வெளியிட்ட அரசியல்வாதிகளுக்கு பதிலளித்த விக்கிரமசிங்க பின்வருமாறு கூறினார்”

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற வகையில் தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது எனது பொறுப்பு. 13 வது திருத்தம் 36 வருடங்களாக அரசியலமைப்பின் அங்கமாக இருந்து வருகிறது. அதை நான் நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது அரசியலமைப்புக்கு புதிய திருத்தம் ஒன்றை பாராளுமன்றத்தில் எவராவது தனிநபர் சட்டமூலமாகக் கொண்டு வந்து அதை ஒழிக்க வேண்டும்.

அத்தகைய சட்டமூலம் சபையில் பெரும்பான்மை வாக்குகளினால் தோற்கடிக்கப்படுமானால் பிறகு 13வது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்த வேண்டியிருக்கும். அதை நடைமுறைப்படுத்தப் போவதுமில்லை, ஒழிக்கப் போவதுமில்லை என்று இரண்டுங் கெட்டான் நிலைப் பாட்டில் தொடர்ந்து இருக்கமுடியாது.”

குறுகிய காலப்பகுதிக்குள் மீண்டும் ஒரு தடவை பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்தி வைத்து சில நாட்களுக்குள்ளாகவே புதிய கூட்டத்தொடரை பெப்ரவரி 8 சம்பிரதாயபூர்வமாக தொடக்கிவைத்து ஜனாதிபதி கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திக் கொண்டிருந்த போது பாராளுமன்றத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குமார் 13 வது திருத்தத்தின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தினர்.

தைப்பொங்கல் பிரகடனத்தைச் செய்து ஒரு மாத காலம் கூட கடந்து விடுவதற்கு முன்னதாக நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்கு விக்கிரமசிங்கவுக்கு இரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஒன்று நாட்டின் 75 வது சுதந்திரதினம். மற்றையது பெப்ரவரி 8 கொள்கை விளக்கவுரை. கொழும்பு காலிமுகத்திடலில் இடம் பெற்ற சுதந்திரதின தேசிய கொண்டாட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றவில்லை. அன்றைய தினம் மாலையில் தொலைக்காட்சி மூலம் நாடு மக்களுக்கு அவர் உரையாற்றினார். அதில் 13 வது திருத்தம் பற்றி எதுவும் கூறவில்லை. அதேபோன்றே கொள்கை விளக்கவுரையிலும் அதைப் பற்றி வாய் திறக்கவில்லை.

தற்போது சிங்கள அரசியல் சமுதாயத்தில் எவரும் 13வது திருத்தத்தைப் பற்றி பேசுவதில்லை. அது விடயத்தில் சிங்கள பௌத்த சக்திகளையும் மகாசங்கத்தையும் மீறி எதையும் செய்ய முடியாது என்ற நிலை. ஆனால், இனப்பிரச்சினைக்கு ஒரு முழுமையான தீர்வாக அந்த திருத்தம் அமையாவிட்டாலும் நிலையான அரசியல் தீர்வை நோக்கிய செயன்முறைகளின் முதற்படியாக அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே பொதுவில் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

இத்தகையதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதி விக்கிரமசிங்க இவ்வருட இறுதிக்குள் அதாவது ஏழு மாதங்களுக்குள் அரசியல் தீர்வொன்றைக் காண சகல அரசியல் கட்சிகள் மத்தியிலும் இணக்கத்தை காண்பது குறித்து மேதினத்தன்று கூறியிருக்கிறார்.

முதலில் ஜனாதிபதி அழைத்துப் பேச வேண்டியது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அல்ல. குறைந்தபட்சம் 13வது திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த சூழ்நிலையை தோற்றுவிக்க மகாசங்கம் உட்பட தென்னிலங்கை அரசியல் சக்திகள் மத்தியில் ஓரளவுக்கேனும் கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்காமல் வருட இறுதிக்குள் தீர்வு காண்பதுபற்றிபேசுவதில் அர்த்தமில்லை.

தென்னிலங்கையில் அத்தகைய ஒரு கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதுடன் தமிழ் பிரதேசங்களில் நில அபகரிப்பு மற்றும் கலாசார ஆக்கிரமிப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் ஒருவித நம்பிக்கையைத் தோற்றுவித்த பிறகு தமிழ்க்கட்சிகளை மீண்டும் பேச்சுக்கு அழைத்திருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும். தற்போது தமிழ்க்கட்சிகளுடன் நடத்துகின்ற பேச்சுவார்த்தைகளுக்கு சமாந்தரமாக தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் மத்தியில் கருத்தொருமிப்பை ஏற்படுத்தும் முயற்சிகளையும் ஜனாதிபதி செய்தால் முன்னெடுப்புகளுக்கு ஒரு நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதாக அமையும்.

# பீச் கிராப்ட் கொடையின் பின்னணி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



கடந்த மே 12ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்சன், அவரிடம் அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கிளேர் ஓ நீல் அனுப்பி வைத்திருந்த கடிதம் ஒன்றைக் கையளித்திருந்தார். ரோயல் அவுஸ்திரேலிய விமானப்படையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட, பீச் கிராப்ட் கே .ஏ 350 விமானத்தை இலங்கை விமானப்படைக்கு கொடையாக வழங்குவது தொடர்பான அதிகாரபூர்வ கடிதமே அதுவாகும்.

இது தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டிருந்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், 'இந்தக் கொடை இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திறனை வலுப்படுத்தும். இது நாடு கடந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுவதில் எமது நெருங்கிய ஒத்துழைப்பின் மேலும் ஒரு நிரூபணமாகும்,' என்று குறிப்பிட்டிருந்தார்.

கண்காணிப்பு விமானத்தை வழங்குவது தொடர்பான கடிதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படுவதற்கு, ஒரு வாரத்துக்கு முன்னதாக, மே 9ஆம் திகதி காலை 9.40 மணியளவில் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த விமானம் ஒன்றில் 41 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு, அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

பெரும்பாலும், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள், பல நாள் மீன் பிடிப் படகுகளின் மூலம் அவுஸ்திரேலிய கடல் எல்லைக்குள் நுழைய முயன்ற போது, கைது செய்யப்பட்டு, கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டிருந்தனர். இவர்கள் எப்போது, பிடிபட்டனர் என்ற தகவலைக் கூட அவுஸ்திரேலியா வெளியிடவில்லை. இப்போது அவுஸ்திரேலிய அரசாங்கம், சட்ட விரோத குடியேறிகளுடன் படகுகள் தமது நாட்டை நோக்கி வருவது அல்லது இடைமறிக்கப்படுவது பற்றிய தகவல்களை கூட வெளியிடுவதில்லை.

அது மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்து விடக்கூடும் என்ற அச்சம் அவுஸ்திரேலியாவுக்கு இருக்கக் கூடும். அதனால் கடலில் பிடிபட்டவர்களை எந்த பரபரப்பும் இல்லாமல், எந்தளவுக்கு விரைவாக திருப்பி அனுப்ப முடியுமோ அனுப்பி விடுகிறது. என்ன தான் அவுஸ்திரேலியா தனது எல்லைகளை இறுகக் கட்டிக் காப்பாற்ற முனைந்தாலும், ஓரிரு படகுகளாவது, அதற்கு சவாலாக அமைந்து விடுகின்றன. இவ்வாறான நிலையில் தான், இலங்கை விமானப்படைக்கு, கே.ஏ350 என்ற பீச் கிராப்ட் கண்காணிப்பு விமானத்தை கொடையாக வழங்கியிருக்கிறது அவுஸ்திரேலியா. அவுஸ்திரேலியா வழங்கியிருக்கின்ற இந்த விமானம், புதியது அல்ல, மிகவும் பழைமையானது.

2009இல் உற்பத்தி செய்யப்பட்டு, 2010 இல் அவுஸ்திரேலிய விமானப் படையின் 38ஆவது ஸ்குவாட்ரனில் இணைத்துக் கொள்ளப்பட்டது. 2018 இல் அந்த ஸ்குவாட்ரன் கலைக்கப்பட்ட போது, 32 ஆவது ஸ்குவாட்ரனுடன் இணைக்கப்பட்டது. அதனைத் தான் இப்போது இலங்கை விமானப்படைக்கு வழங்கவுள்ளது அவுஸ்திரேலியா. கூடவே, ஒரு வருடத்துக்கு இந்த விமானத்தை பயன்படுத்துவது, பராமரிப்பதற்கான செலவுகளையும் அவுஸ்திரேலிய அரசாங்கமே வழங்கவுள்ளது. இலங்கைக்கு இது போன்ற இராணுவ உதவிகளை அவுஸ்திரேலியா வழங்குவது இதுதான் முதல் முறையல்ல. ஏற்கனவே, 2013 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பதவியில் இருந்த போது, இரண்டு ரோந்துப் படகுகளை கொடையாக வழங்கியிருந்தது அவுஸ்திரேலியா. சட்டவிரோத குடியேறிகளின் படகுகள் அதிகளவில் அவுஸ்திரேலியாவை நோக்கி சென்று கொண்டிருந்த காலகட்டத்தில் அந்த உதவி வழங்கப்பட்டது. பின்னர், அந்த கடற்படைப் படகுகளின் இயந்திரங்கள் செயலிழந்த போது, அவற்றுக்குப் புதிய இயந்திரங்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் அவுஸ்திரேலியா கொடையாகவே வழங்கியது.



கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில், இலங்கை கடற்படை மற்றும் விமானப் படை, போதிய எரிபொருள் கிடைக்காததால், கடல்சார் கண்காணிப்புகளை குறைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட் டன. அந்தச் சந்தர்ப்பத்தில், அவுஸ்திரேலியாவின் கோரிக்கைக்கு அமைய, இலங்கை கடற்படை மற்றும் விமானப்படைக்குத் தேவையான எரிபொருளை இந்தியா வழங்கியது.

இப்போது இந்தியாவின் கோரிக்கைக்கு அமையவே, இலங்கை விமானப் படைக்கு பீச் கிராப்ட் விமானத்தை அவுஸ்திரேலியா கொடையாக வழங்கியிருப்பதாக இந்தியா தெரிவித்திருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் இந்த கொடை, இலங்கையின் கடல்சார் பாதுகாப்புத் திறனை அதிகரிக்கும் நோக்கம் கொண்டதா? அல்லது தனது நாட்டை நோக்கில் வரும் சட்டவிரோத குடியேறிகளைத் தடுக்கும் நோக்கம் கொண்டதா? அல்லது பிராந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளதா? என மூன்று கேள்விகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. மேலோட்டமாகப் பார்த்தால், இந்த மூன்று காரணிகளையும் வெவ்வேறாக பிரித்துப் பார்க்க முடியாது. மறுக்கவும் முடியாது. மூன்று காரணங்களும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை தான்.

இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு பலவீனமடைவதை பிராந்திய நாடுகள் விரும்பவில்லை. அதேவேளை, தங்களின் நாட்டை நோக்கி வரும் சட்ட விரோத குடியேறிகளை இலங்கை கடல் எல்லைக்குள் வைத்தே தடுத்து விடுவதற்கும் அவுஸ்திரேலியா விரும்புகிறது. அதைவிட பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இலங்கை முக்கியமானது. இத்தகையதொரு சூழலில் தான், அவுஸ்திரேலிய விமானப்படை தனது கண் காணிப்பு விமானத்தை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. விமானங்கள், கடற்படைக்கப்பல்களை இலங்கை கொடையாகப் பெற்றுக் கொள்வது இது முதல் முறையல்ல.

சுதந்திரம் பெற்ற பின்னர் பிரித்தானியா தனது விமானங்களையும், கப்பல்களையும் வழங்கியது. 1971 கிளர்ச்சிக்குப் பின்னர், சீனா போர்க் கப்பல்களையும், மிக் 5போர் விமானங்களையும் கொடையாக வழங்கியது. போர் நடந்து கொண்டிருந்த போதும், அது முடிந்த பின்னரும், அமெரிக்கா மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களையும், சீனா ஒரு கப்பலையும் இந்தியா மூன்று கப்பல்கள் மற்றும் ஒரு டோனியர் விமானத்தையும் கொடையாகவோ அல்லது நீண்டகால கடன் அடிப்படையிலோ வழங்கியிருக்கின்றன. அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பானும் கடற்படைப் படகுகளை வழங்கியிருக்கின்றன. இலங்கை படைகளின் கடல்சார் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கத்துடனேயே, விமானங்களும், கப்பல்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.


அதற்கு முக்கியமான காரணம், இந்தியப் பெருங்கடலில் இலங்கை ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக விளங்குகிறது. இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு என்று வருகின்ற போது, இலங்கையைப் புறக்கணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. அதனால் தான், அமெரிக்காவின் இந்தோ பசுபிக் மூலோபாயத்திலும், சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் பாதுகாப்பு சார் கொள்கைகளிலும் இலங்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், அதனைத் தடுப்பதற்கு சீனாவின் செல்வாக் கிற்கு உட்பட்ட இலங்கையையே ஏனைய நாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

முள்ளை முள்ளால் எடுப்பது போலத் தான், இந்தியப் பெருங்கடலில் சீனாவின் அதிகரித்த பிரசன்னத்தை தவிர்ப்பதற்கு, சீனாவின் நண்பனையே பயன்படுத்த அமெரிக்கா போன்ற நாடுகள் முற்படுகின்றன. இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் நான்கும் இணைந்து குவாட் அமைப்பை உருவாக்கியிருக்கின்றன.


இந்த அமைப்பு சீனாவின் ஆதிக்க விரி வாக்கத்தை தடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. குறிப்பாக இந்தோ பசுபிக்கில் சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கை தடுக்கும் நோக்கம் கொண்டது. கடந்த மாதம் இலங்கைக்கு தெற்கே 900 கடல் மைல் தொலைவில், 39 பேருடன் சீனாவின் மீன்பிடிக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது நினைவிருக்கலாம். அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகள், தேடுதல் மீட்பு நடவடிக்கைக்கு உதவி வழங்கின. ஆனாலும், அந்தக் கப்பலில் இருந்த ஒரு வரைக் கூட காப்பாற்ற முடியவில்லை.இதன் பின்னர் சீனா இந்தியப் பெருங்கடலில் தனது கடற்படைப் பிரசன்னத்தை அதிகரிக்கலாம் என்ற அச்ச நிலை தோன்றியிருக்கிறது. ஏடன் வளைகுடாவில் சோமாலிய கடற் கொள்ளையர்களிடம் இருந்து தங்களின் நாட்டு கப்பல்களை (22ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.




மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.



சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.



கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.




துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்




விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.







தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.



மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.



கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.



மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## தமிழ்த்தேசியம் ஒரு தோல்வி வாதமா?

(19ம் பக்கத் தொடர்ச்சி) பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்திருக்கின்றனர். அவ்வாறானவர்களை முன்னரைப் போல் இலகுவாக புறம்தள்ள முடியாது. ஆனால் அரசியலில் சாதிய மேலாதிக்கம் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் கூட, மறைமுகமாக ஏதோவொரு வகையில் தொடரத்தான் செய்கின்றது.

ஒரு பெரும் விடுதலைப் போராட்டம் நிகழ்ந்ததாக கூறப்படும் சூழலில், சாதிய மேலாதிக்க மனோபாவத்தை கடந்து செல்ல முடியாமல் இருக்கின்றதென்றால், இதுவரை காலமும் முன்னிலைப்படுத்தப்பட்ட தமிழ் தேசியவாதம் தோல்வியடைந்து விட்டது என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டும். தமிழ் தேசியவாதம் ஒரு முற்போக்கு வாதமாக பரிணமிக்கவில்லை. அது வெறும் அரசியல் சுலோகமாகவே நிலை பெற்றிருக்கின்றது. சமூகத்தின் பாகுபாடுகளை சிதைத்து, மேலெழும் ஒரு மந்திரச் சொல்லாக தமிழ் தேசியவாதம் எழுச்சியுறவில்லை. இதன் விளைவாகவே, இப்போதும் சாதியம் தொடர்பில் விவாதிக்கக் கூடிய நிலைமை தமிழ்ச் சூழலில் காணப்படுகின்றது. இதற்கு மதில் மேல் பூனையாக வாழும் ஆய்வாளாகள், புத்திஜீவிகள் என்போரும் ஒரு காரணமாவர். ஏனெனில் அரசியல்வாதிகள் உச்சரிக்கும் தமிழ் தேசியத்தையே சரியானதொரு வாதம் போன்று ஆய்வாளர்கள் என்போரும் பிரதிசெய்ய முற்படுகின்றனர்.

உண்மையில் இன்று உச்சரிக்கப்படும் தமிழ் தேசியம் பெரும்பாலும் யாழ்ப்பாணத்திற்குள் சுருங்கிப்போன வாதமாகவே இருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு வெளியில், இதற்கு பெரியளவில் மக்கள் கவர்ச்சியிருப்பதாக தெரியவில்லை. ஒரு பலமான புலம்பெயர் சமூகமிருப்பதால், ராஜதந்திரிகள், கொழும்பு அரசியல்வாதிகள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்குச் செல்வதாலும் அனைத்தும் தங்களை சுற்றியே வட்டமிடுவதான மாயத் தோற்றமொன்றுக்குள் பலர் சிக்கியிருக்கின்றனர். ஆனால் பலரும் காணத் தவறுகின்ற விடயமொன்றுண்டு. அதாவது, ஏனைய மவாட்ட மக்கள் தமிழ் தேசிய அரசியல் சுலோகத்திலிருந்து விலகிக்கொண்டு செல்கின்றனர்.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் பேசப்படும் விடயங்கள் எதனையும் ஏனைய மாவட்டங்களிருப்பவர்கள் கருத்தில்கொள்ளவில்லை. ஏன் ஆகக் குறைந்தது யாழ்ப்பாணத்திலிருக்கும் சாதாரண மக்களும் இவைகள் தொடர்பில் அலட்டிக்கொள்ளவில்லை. உண்மையில் இன்றைய தமிழ் தேசிய சுலோகம் பெருமளவு மக்களுக்கு அன்னியமான ஒன்றாகவே காட்சியளிக்கின்றது. சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் செயற்கையாக சில எதிர்ப்புக்களை ஏற்படுத்துவதன் ஊடாக, தமிழ் தேசியத்திற்கு உயிரூட்டலாமென்று எண்ணுகின்றனர். முன்னரைப் போன்று, சிங்கள எதிர்ப்பை முன்னிலைப்படுத்தி தமிழ் தேசிய அரசியலுக்கு உரமூட்ட முடியாது. அந்தக் காலம் மலையேறி விட்டது. விடயங்களை அறிவுபூர்வமாக அணுகுவதன் ஊடாகவே இன்றைய சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

சிங்கள ஆளும் வர்க்கம் அதன் நகர்வுகளை திறம்பட செய்து கொண்டேயிருக்கின்றது. சிறிய விடயங்களில் தமிழ் அரசியல்வாதிகளின் கவனத்தை சிதறடித்து விட்டு, நீண்டகால நோக்கிலான நகர்வுகளை காதும் காதும் வைத்தாற்போல் நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். திருகோணமலையை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு நகர்வுகள் இடம்பெறவுள்ளது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகளோ, புத்தர் சிலையை தாண்டி சிந்திக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். காலப்போக்கில் சாதியபடிநிலைகளில் – கீழ்நிலையில் இருப்பதாக கூறப்படும் மக்கள் பிரிவொன்று, புத்தரையும் தங்களுடைய விடுதலைக்கான மார்க்கமாக கூறினாலும் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை.

## இலங்கையில் மாற்றம் ஏற்படாத நிலையில்

(15ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஒரு நினைவு வளாகத்தை உருவாக்க முடியுமா ? நிச்சயமாக இல்லை. ஏனென்றால் இங்கே நிலை மாற்றம் ஏற்படவில்லை. நிலை மாற்றம் மூன்று இனங்களுக்கிடையிலும் ஏற்படவில்லை மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேற்றான் ஏற்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத் தீவும் தயாராக இல்லை் தமிழரசியலும் தயாராக இல்லை.

## தமிழரசுக்கட்சிக்குள் தடாலடி மாற்றங்கள்!

(4ம் பக்கத் தொடர்ச்சி) சுமந்திரன் எம். பி., குகதாசன் ஆகியோ ரின் செயல்பாடுகள் தொடர்பில் தமிழரசு கட்சியின் திருமலை மாவட்ட பிரமுகர்கள் கடும் அதிருப்திகளை சம்பந்தனுக்கு வெளிப்படுத்தி வந்தனர். இந்த நிலையிலேயே சம்பந்தன் கட்சிக்குள் அதிரடியாக சில நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பீச் கிராப்ட் கொடையின் பின்னணி

(21ம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாப்பதற்கென, சீனா தனது போர்க்கப்பல்களின் அணி ஒன்றை முதலில் அனுப்பியது. பின்னர் அந்த அணியில் நீர் மூழ்கிகளையும் சேர்த்துக் கொண்டது.

அதன் பின்னர், ஜிபுட்டியில் கடற்படைத் தளம் ஒன்றையும் அமைத்து விட்டது. அது போல, இந்தியப் பெருங்கடலில் தனது மீன்பிடிக் கப்பல்கள் மற்றும், கப்பல்களின் பாதுகாப்புக்காக என்று கூறி சீனா விமானம் தாங்கி கப்பல் ஒன்றை நிறுத்தும் ஆபத்து காணப்படுகிறது. சீனா இரண்டு விமானந்தாங்கிகளை ஏற்கனவே கடற்படையில் இணையவிட்டது. இப்போது மூன்றாவது விமானந்தாங்கி கப்பல் தயாராகி வருகிறது. இந்தியப் பெருங்கடலில் தனது கடற்படையை வலுப்படுத்தற்கு சீனாவுக்கு காரணம் கிடைக்காத சூழலை உருவாக்கவே, அமெரிக்கா, இந்தியா, போன்ற நாடுகள் முற்படுகின்றன.

அதற்காகவே இலங்கையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை அதிகரிக்க முனைகின்றன. சீன மீன்பிடிக் கப்பல் மூழ்கிய போது, இலங்கை கடற்படையின் விஜயபாகு போர்க்கப்பல் அங்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டு 14 மீனவர்களின் சடலங்களை மீட்டுக் கொடுத்தது. இது பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு மாத்திரமல்ல. சீனாவை உள்நுழையாத வகையில் தடுப்பதற்கான குவாட் உத்தியின் ஒரு பகுதியும் கூட. இதனுடன் இணைத்துப் பார்க்கின்ற போது, அவுஸ்திரேலியா ஏன் பீச் கிராப்ட் விமானத்தை கொடையாக வழங்கியது என்று புரிந்து கொள்வது கடினமாக இருக்காது.

**ஈழநாடு தொடர்புகளுக்கு 416 841 9600**

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road
Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A,
MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.